வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 08.03.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 68 பக்கங்கள் : 12

### சிவராத்திரி பூசை ஏற்பாடுகளை செய்வதற்கு சென்ற

# வெடுக்குநாறிமலை சிவன் ஆலய பூசகர் உட்பட இருவர் கைது!

வவுனியா, மார்ச் 08

**வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின ஏற்பாடுகளை செய்வதற்காக அங்கு சென்ற ஆலய பூசகர் உட்பட இருவரை நெடுங்கேணி பொலிஸார் கைது செய்தனர்.**

நீதிமன்றத்தின் அனுமதி கட்டளையுடன் வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்றைய தினம் விசேட பூசை ஏற்பாடுகளை செய்வதற்காக நேற்று உழவு இயந்திரத்தில் ஆலயத்துக்கு சென்றபோதே அந்த சூழலில் வைத்து பொலிஸார் அவர்களை கைது செய்தனர்.

முன்னதாக, இன்றைய தினம் மகா சிவராத்திரி தின விசேட பூசை - வழிபாட்டை மேற்கொள்ள பொலிஸார் தடைகளை ஏற்படுத்தினர். இதையடுத்து, அவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்தனர்.

இதை ஏற்று வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஆலய விவகாரத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட - தொல்பொருள்களுக்கு சேதம் ஏற்படுத்தாதவாறு பூசை ஏற்பாடுகளை செய்ய முடியும் - என்ற கட்டளையின்படி செயல்பட கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதி வழங்கியது.

இதன்படி, நேற்றைய தினம் மகா சிவராத்திரி விசேட பூசை ஏற்பாடுகளை செய்வதற்காக சென்றபோதே பொலிஸார் பூசகரையும் அவரின் உதவியாளரையும் கைது செய்தனர்.

முன்னதாக, தமிழர்களின்

11




வடக்கின் பெரும்போர்:

## சுருண்டது யாழ். மத்திய கல்லூரி சென். ஜோன்ஸ் வலுவான நிலை!

யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 157 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் சென். ஜோன்ஸ் கல்லூரி முதல்நாள் ஆட்டம் முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 109 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உள்ளது.

“வடக்கின் பெரும் போர்“ என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று ஆரம்பமானது.

11

## ஆசிரியர் நியமனங்கள் தொடர்ந்து வழங்கப்படும்!

### கல்வி அமைச்சர் சுசில்

கொழும்பு, மார்ச் 08

நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஆசிரியர் நியமனங்கள் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில், மேல் மாகாணத்தில் 5 ஆயி ரத்து 305 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுகிறது. இதனை நிரப்புவதற்காக பரீட்சை

11



## சுழிபுரத்தில் அமர்ந்த புத்தர் சிலை அகற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

சுழிபுரத்தில் புதிதாக வைக்கப்பட்ட புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டதாக தெரிய வருகின்றது.

சுழிபுரம் சுழிபுரம் சவுக்கடி பிள்ளையார் ஆலயத்துக்குப் பின்புறமாக, அரச மரத்தின் மூன்று தினங்களுக்கு முன்னர் புத்தர் சிலை வைக்கப்பட்டது.

அங்குள்ள கடற்படை முகாமை சேர்ந்தவர்களால் இந்த சிலை வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில்,

11

## 22 இந்தியர்கள் கைதாகினர்!

கொழும்பு, மார்ச் 08

கணினி, கைபேசிகளை பயன்படுத்தி மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 22 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - தலங்கம பிரதேச்தில் கைதான இந்த இந்தியர்களிடம் இருந்து 35 கைபேசிகள், 5 மடிக் கணினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்திய தூதரக அதிகாரி ஒருவரின் முறைப்பாட்டின் பிரகாரம் தலங்கம - நாகஹமுல்லை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## இரு மாதங்களில் மட்டும் 112 சிறுமிகள் கருத்தரிப்பு

கொழும்பு, மார்ச் 08

இந்த வருடத்தில் இதுவரையான நாள்களில் மட்டும் 112 சிறுமிகள் கருத்தரித்துள்ளனர். இவர்கள் அனைவரும் 16 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த 2022 ஆம் ஆண்டில்

11

## மன்னார் காற்றாலையால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து ஆய்வு

### அமைச்சர் பவித்ரா உறுதி

கொழும்பு, மார்ச் 08

மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள காற்றாலை மின்சார திட்டத்தால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பிரச்னைகள் குறித்து ஆராயவுள்ளதாக வனஜீவராசிகள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உத்தேச காற்றாலை மின் திட்டம் மன்னாரில் உள்ள பறவைகள் வழித்தடத்தை தடை

11

## கோப், கோபா குழுக்களுக்கு புதிய தலைவர்கள் நியமனம்

கொழும்பு, மார்ச் 28

கோப், கோபா குழுக்களுக்கு புதிய தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோப் எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான நிலையியல் குழுவின் தலைவராக ரோஹித அபே குணவர்த்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரின் கோப் குழு முதல் தடவையாக நேற்று கூடியபோதே அவர் தெரிவு செய்யப்பட்டார்.

இதன்போது, தலைவர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்த்தனவின்

11

## சம்பள அதிகரிப்பு விடயத்தை பயன்படுத்தி மத்திய வங்கியின் சுதந்திரத்தை பறிக்க சதி!



### ஆளுநர் வீரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 08

மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில், இந்த சர்ச்சையைப் பயன்படுத்தி மத்திய வங்கியின் சுதந்திரத்தை பறிக்க சதிமுயற்சி இடம்பெறுவதாக அதன் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிதித்துறையை ஒழுங்கமைக்கும் நிறுவனமான மத்திய வங்கியின் சுயாதீனத்தை மலினப்படுத்த சம்பள அதிகரிப்பை மிகைப்படுத்துவது - பொருளாதாரத்தின்மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி, ஒரு சில வருடங்களுக்கு முன்னர் இருந்த குழப்ப நிலைக்கு அதைக் கொண்டு போய் விடக்கூடிய ஆபத்து இருக்கிறது.

நிதித்துறை அதிகாரிகளிடமிருந்து

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

'இந்திய சிறையில் இருக்கின்ற முருகன், றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரையாவது உயிருடன் விடுதலை செய்து அவர்களின், குடும்பத்தோடு சேர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர், இந்தியப் பிரதமர் மற்றும் இலங்கை அரசிடம் கேட்கிறோம்' - என்று தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது அவர் விடுத்த கோரிக்கையை இந்திய பிரதமர் கேட்டுக்கொண்டிருந்திருப்பார் என்று நம்புவோம்.

சாந்தனின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழக வழக்கறிஞர் புகழேந்தி விடுத்திருந்த கோரிக்கை தொடர்பாக நேற்றும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தோம்.

சாந்தனின் விடுதலைக்கு தமிழ் தலைமைகள் என்று சொல்பவர்கள் உரிய நடவடிக்கையை எடுத்திருந்தால், அவர் சில நாட்களாவது தனது தாயுடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால், நமது தலைவர்கள் எந்தப் பிரச்னையை எப்படிக் கையாள வேண்டும் என்பதில் போதிய தெளிவு இருப்பவர்களாகத் தெரியவில்லை என்று ஓர் ஆய்வாளர் எழுதியிருந்தது சரியானதுதானோ என்றே இப்போது எண்ண வேண்டியிருக்கின்றது.

ராஜீவ் கொலையில் தண்டனை பெற்று மூன்று தசாப்த சிறைவாசத்தின் பின்னர் விடுதலையானவர்களில் ஈழத்தமிழர்கள் நால்வர் தவிர்ந்த ஏனைய இந்தியர்கள் தத்தமது குடும்பங்களுடன் தற்போது வாழ்ந்து வருகின்றனர். ஈழத்தமிழர்கள் நால்வரில் சாந்தன் மாத்திரமே தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்திருந்தார். ஏனையவர்கள் தாயகத்துக்கு திரும்பாமலே அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கே செல்ல விரும்பினர்.

ஒரு வெளிநாட்டவர் நாடு கடத்தப்படுவதெனில், அவரது சொந்த நாட்டுக்கு நாடு கடத்தப்படுவதற்கே இந்திய சட்டங்கள் இடம் தருகின்றன. அதனாலேயே மற்றைய மூவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்கள் சிறையில் இருந்த போது இருந்த வசதிகளைவிட மிகக்கொடிய சிறப்பு முகாமில் அவர்கள் இப்போது வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவை பற்றியெல்லாம் பலரும் பலவாறு பேசியாகிவிட்டது. சிறப்பு முகாமில் இருப்பதைவிட அவர்கள் சிறையிலேயே இருந்திருக்கலாமோ என்றுகூட சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். அந்தளவுக்கு சிறப்பு முகாம் என்பது உடலாலும் உளத்தாலும் ஒருவகை சித்திரவதைக் கூடமே.

அதுவல்ல இன்று நாம் இங்கே சொல்ல வருவது, அங்கே இருக்கின்ற மூவரில் முருகன் ஓர் இந்தியப் பிரஜையின் கணவர். ராஜீவ் கொலை வழக்கில் தண்டனைபெற்று விடுதலையான நளனியின் கணவர். அவர்களது மகள் தற்போது லண்டனில் வசித்துவருகின்றார். அவர்கள் இருவரும் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவது தவிர்க்க முடியாத ஒன்று.

ஆனால், முருகன் இலங்கைப் பிரஜை என்பதாலும் அவர் இலங்கை செல்ல விரும்பவில்லை என்பதாலுமே அவர் பிரிட்டன் செல்வது முடியாத காரியமாகியிருப்பதாகவே பலரும் எழுதி வருகின்றனர்.

ஓர் இந்தியப் பிரஜை வெளிநாட்டவர் ஒருவரை திருமணம் செய்தால் அவர் இந்தியாவில் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக இந்தியாவில் வாழ்ந்தாலே அவர் இந்தியாவில் ஓ. சி. ஐ. (OCI) கார்ட்டுக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியானவர் ஆகிவிடுகின்றார். இந்திய கடவுச்சீட்டுக்கு நிகரான இந்த கார்ட்டை பெறுவதற்கு முருகன் தகுதியானவர் என்கிறார் தமிழகத்திலுள்ள ஓய்வுபெற்ற அதிகாரி ஒருவர். ஊர்க்குருவி அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் சொன்னார், 'அதற்கு தேவையானது முருகனிடம் அவரது இலங்கை பாஸ்போர்ட் இருக்க வேண்டும், பின்னர் அவர் ஓ. சி. ஐ. கார்ட்டுக்கு விண்ணப்பிக்கின்றபோது அவருக்கு இந்திய பாதுகாப்பு அனுமதி தேவைப்படும். அதற்காகவே மத்திய அரசுடன் பேச வேண்டியிருக்கும்' என்று.

முதலில் முருகனிடம் இலங்கை பாஸ்போர்ட் இருக்குமா என்பது தெரியவில்லை. அவரிடம் இல்லையெனில் அவருக்கு பாஸ்போர்ட்டைப் பெற்றுக் கொடுப்பதில் நமது தலைவர்கள் இலங்கை அரசுடன் பேசவேண்டும். தத்தமது சொந்த தேவைகளுக்காக அரசாங்கத்தை அணுகும் அவர்களுக்கு இது ஒரு 'மலையைத் தூக்கும்' விவகாரமல்ல.

அதுபோலவே மற்றைய இருவரான றொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோருக்கு அவர்கள் நிலையை எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குமாறு ஐரோப்பிய நாடு ஒன்றிடம் குறிப்பாக சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளிடம் கேட்கலாம். அவர்கள் கொலை குற்றம்சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் என்றாலும், அவர்கள் அரசியல் கைதிகளே. அரசியல் இயக்கம் ஒன்றினால் தூண்டப்பட்டு இந்த கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு அகதி அந்தஸ்து பெற உதவினால், அதற்கு பின்னர் அவர்களுக்கும் இலங்கை பாஸ்போர்ட் தேவையேற்படலாம். ஆக, மூவருக்குமாகவே இலங்கை பாஸ்போர்ட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு நமது தலைவர்கள் முதலில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசவேண்டும்.

அதற்காக பாராளுமன்றத்தில் நின்று குரல்கொடுத்தால், அது பத்திரிகைகளில் செய்தியாக வெளிவருமே தவிர எந்த பயனையும் பெற்றுத்தராது.

**- ஊர்க்குருவி.**

# வடக்கின் பெரும் போர் பதிவுகள்



வடக்கின் பெரும் போர் என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளின் 117ஆவது பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானவேளை...! (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.03.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மாசி 25

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெறும் பேச்சுகளால் என்ன பயன்?

தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சுகள் சினிமா வசனங்கள்போல் ஆகி வருகின்றன. பாராளுமன்றத்தில் விடயத்தை பேசிவிட்டால் தங்களின் பணி முடிந்துவிட்டது போன்றே அனைவரும் நடந்து கொள்கின்றனர் - இதில், ஆங்கிலத்தில் பேசுவதில் ஒரு பெருமையும் உண்டு. ஆனால், இவ்வாறான பேச்சுகளால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்றால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு பிரச்னையுமே இருந்திருக்காது. தமிழ்நாடு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ராஜீவ் காந்தி கொலைக் குற்றத்துக்காகத் தண்டனை பெற்று விடுதலை செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த மூன்று நபர்களையும் உயிருடன் இலங்கைக்கு அனுப்புமாறு தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். இலங்கை பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுப்பதன் மூலம் இவ்வாறான பிரச்னைகளுக்குத் தீர்வைக் காண முடியுமா?

இந்த விடயம் இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்டது. இந்தியாவிலிருந்து அவர்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றால் முதலில் இது தொடர்பில் இந்தியாவில் இராஜதந்திர வழிமுறைகள் ஊடாக அணுக வேண்டும். குறித்த நபர்கள் விடுதலை செய்யப்பட்டு பல மாதங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் எவருமே ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் சாந்தனும் எப்போதோ இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பார்.

இது இந்திய மற்றும் இலங்கை அரசுகள் தொடர்பான பிரச்னை இல்லை மாறாக - இந்த விடயத்தில் உண்மையான அக்கறையுள்ள தரப்புகள் அனைவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருந்தனரா என்னும் கேள்வியுடன் தொடர்புடையது. தமிழ்நாட்டில் ஈழ ஆதரவாளர்கள் என்போர் சம்பந்தப்பட்டவர்களை இலங்கைக்குக் கொண்டுவருவதில் எவ்வாறான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்?

அனைவருமே தங்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனரே தவிர, அவர்களது பிரச்னையை மனிதாபிமான கண்ணோட்டத்தில் அணுக முயற்சிக்கவில்லை. அவ்வாறு அணுகியிருந்தால், இராஜதந்திர வழிகளில் நடவடிக்கைகளை எடுத்து அவர்களை இலங்கைக்கு கொண்டு வந்திருக்க முடியும். பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அணுகிய போது, அவர் சாந்தனின் விடயத்துக்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை. அதனை ஏற்றுக்கொண்டார். இதனை ஆரம்பத்திலேயே செய்திருந்தால் சாந்தன் விடயம் சிக்கலானதாக மாறியிருக்காது.

குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டவர்கள் பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துவிட்டனர். இந்தப் பின்புலத்தில் விடுதலை செய்யப்பட்டவர்கள் அவர்களின் இறுதிக் காலத்தை அவர்கள் விரும்பியவாறு வாழ்வதற்கான உரிமையுடைவர்கள். அதற்கான ஏற்பாட்டை செய்துகொடுக்க வேண்டியது ஒரு மனிதநேய பணியாகும். இதனை ஓர் அரசியல் நிகழ்வாக்கி மற்றவர்கள்மீது குற்றஞ்சாட்ட முற்பட்டால் தற்போது திருச்சி சிறப்பு முகாமில் இருப்பவர்களின் வாழ்வே மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகும். இதனை கருத்தில் கொண்டே, அனைவரும் இந்த விடயத்தை கையாள வேண்டும். மற்றவர்களின் வாழ்வை ஒவ்வொருவரும் தங்களின் சொந்த அரசியல் தேவைகளுக்காகப் பயன்படுத்த எத்தனிக்கக்கூடாது. இவ்வாறான விடயங்களை முற்றிலும் மனிதநேயக் கணணோட்டத்தோடு மட்டுமே அணுக வேண்டும்.

தமிழ் அரசியல்வாதிகள் விடயங்கள் அனைத்தையுமே அறிக்கைகளாகவும் பாராளுமன்ற உரைகளாகவுமே முடித்துக் கொள்கின்றனர். தங்களை உணர்வாளர்கள் என்று அடையாளப்படுத்திக்கொள்ள முயற்சிப்பவர்களும் ஆவேசமான வார்த்தைகளுக்குள் தங்களை சுருக்கிக்கொள்கின்றனர். எவரிடமும் முறையான அணுகுமுறைகள் இல்லை - வெறும் குற்றச்சாட்டுக்களில் திருப்திப்பட்டுக் கொள்வதே அனைவரின் செயலாகவும் இருக்கின்றது. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த 14 வருட கால அரசியல் நகர்வுகள் அனைத்தும் இந்த அடிப்படையில்தான் இருக்கின்றன. இதிலிருந்து தமிழ் சமூகம் விடுபடாது விட்டால் விமோசனங்களை காண்பது அரிதானது.

# 300 வருடங்களின் பின்னர் வரும் அபூர்வ மகா சிவராத்திரி

**இன்று மகா சிவராத்திரி தினமாகும். இதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



*விரதங்களிலேயே சிறந்தது மகா சிவராத்திரி விரதம். வரத பண்டிதம் போன்ற நூல்கள் இதன் மகிமையை விவரிக்கின்றன. மகா சிவராத்திரி அன்று ஈசனைத் தரிசித்தவர் - விரதம் இருந்தவர் - பூசை செய்தவர் - சங்கல்பம் செய்தவர் எல்லோருக்கும் நற்கதி கிடைக்கும் என்கின்றன புராணங்கள்.*

*ஜோதிட சாஸ்திரங்களின்படி, இந்த ஆண்டு மகா சிவராத்திரி அன்று சர்வார்த்தி சித்தி யோகம், சிவ யோகம், ஷிரவண நட்சத்திரம், சுக்கிரப் பிரதோஷம், மகா சிவராத்திரி என்ற ஐந்து சிறப்பு யோக வேளைகளும் கூடி வருகின்றன. இந்த மகா சிவராத்திரியில் விரதமிருந்து கண் விழித்து சிவதியானம் செய்திட எல்லா காரியங்களிலும் வெற்றி உண்டாகும்.*

*வேலை வாய்ப்பு, தொழில் முன்னேற்றம், வியாபார விருத்தி, அதிர்ஷ்டம் மற்றும் செல்வ செழிப்பு உண்டாகும். மகா சிவராத்திரி சுக்கிர வார பிரதோஷத்தில் வருவதால் பொருளாதாரச் சிக்கல்கள் தீர்ந்து செல்வ வளம் சேரும்.*

*சர்வார்த்த சித்தி யோகம் என்றால் உங்களுடைய எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கும் யோகம். இந்த யோக நாளில் ஈசனை வழிபட காரியத் தடைகள் அகன்று எண்ணியவை எளிதாக நிறைவேறும்.*

*சிவ யோகம் என்றால் தியானிக்கும் வேளை. இந்நாளில் செய்யப்படும் யோகா, தியானம், பிராணாயாமம், மந்திர உசசாடனம் ஆகியவைகளால் பன்மடங்கு பலன் கிடைக்கும். 2024 மகா சிவராத்திரி நாளன்று முழுவதுமாக சிவ யோகம் எனும் அற்புதவேளை கூடி வருகின்றது.*

**2024 மகா சிவராத்திரி**

*2024 மகா சிவராத்திரி ஷிரவண நட்சத்திரம் சனி பகவானுக்கு உரியது. இந்த நட்சத்திரத்தில் எந்த நல்ல காரியம் செய்தாலும் அது மங்கலகரமாக முடியும். இந்த மகா சிவராத்திரி நாளில் சனி பகவானையும் அவரை வழிநடத்தும் ஈசனையும் வழிபட்டால் உங்கள் தொழில், வியாபாரம், பதவி உயர்வு போன்ற விசயங்கள் திருப்தியாக அமையும்.*

*மேலும் உங்கள் ஜாதகத்தில் உள்ள எல்லா விதமான நவகிரக தோஷங்களும் நீங்கி விடும்.*

*ஐந்து யோகங்களும் ஒன்று கூடும் இந்த அபூர்வ மகா சிவராத்திரி நாளில் சிவ வழிபாடு செய்யத் தவறாதீர்கள். சிவயோக வேளையில் நீங்கள் செய்யும் வழிபாடு ஈசனின் பரிபூரண அருளை பெற்றுத் தரும். உங்கள் வீட்டைப் பாதுகாப்பாக வைத்திருக்கும். உங்கள் பிள்ளைகள் நலமோடு வாழ்வார்கள். சித்த யோகம் கூடி வருவதால் விநாயகப் பெருமானையும் இந்நாளில் வணங்கி வேண்டும். இதனால் தொடங்கப்படும் சுப காரியங்கள் அனைத்திலும் வெற்றி உண்டாகும்.*

*இந்த மகா சிவராத்திரி காலத்தில் நீங்கள் இருக்கும் விரதம் உங்களையும் உங்கள் சுற்றத்தையும் செல்வ வளமாக்கும்.*

*மகா சிவராத்திரி இந்த ஆண்டு வெள்ளிக்கிழமை வருவதால் சுக்கிர பிரதோஷம் என்கிறோம். இந்த நாளில் ஈசனுக்கு விரதம் இருந்து வழிபட்டால் நீங்காத துன்பம், தீராத வியாதிகள், குறையாத கடன்கள், அனைத்தும் தீர்ந்து விடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கி வாழ்வில் இனிமையும், மகிழ்ச்சியும் நீடிக்கும் என்கின்றன ஜோதிட நூல்கள்.*

**வீட்டில் மகா சிவராத்திரி எப்படி வழிபட வேண்டும்?**

*மகா சிவராத்திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதிக்கும்போது காலையில் செய்ய வேண்டிய பூசைகள் போன்றவற்றை செய்த பின், சிவன் கோயிலுக்குச் சென்று முறைப்படி தரிசிக்க வேண்டும். வீட்டுக்கு வந்தவுடன், அங்கு சிவராத்திரி பூசைக்கு உரிய இடத்தைச் சுத்தம் செய்ய வேண்டும்.*

*அதன் பின் நடுப்பகலில் நீராடி, உச்சிக் கால வழிபாடுகளை முடித்துவிட்டு சிவ பூசைக்கு உரிய பொருட்களைச் சேகரித்து, வைக்க வேண்டும்.*

*மாலை நேர வழிபாட்டை முடித்துவிட்டு, ஏற்கெனவே தூய்மை செய்து அலங்கரிக்கப்பட்ட இடத்தில் சிவலிங்கத்தை வைத்து சாமத்துக்கு ஒன்றாக நான்கு சாமங்களிலும் பூஜை செய்து வழிபட வேண்டும்.*

*அன்று இரவு முழுவதும் கண் விழித்து வழிபாடு செய்ய முடியாவிட்டாலும், ‘லிங்கோற்பவ’ காலமாகிய இரவு 11:30 மணி முதல் ஒரு மணி வரை உள்ள காலத்திலாவது சிவ தரிசனம் செய்து வழிபட வேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**இடபம்**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**கடகம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**சிம்மம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

எதிர்ப்புகள் அடங்கும். தாய் வழி உறவினர்கள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும்.வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டிவரும். உத்தியோகத்தில் அதிருப்தியான சூழ்நிலை உருவாகும். நிதானம் தேவைப்படும்.

**மகரம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**கும்பம்**

ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெரும் நாள்.

**மீனம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உங்கள் கை ஓங்கும். நன்மை நடக்கும் நாள்.

# பல மொழிகள் இருந்தால் ஒரு நாடு ஒரே மொழி என்றால் பல நாடுகள்!


## நாம் தமிழர் சீமான்

சென்னை, மார்ச் 08

''பல மொழிகள் இருந்தால் தான் இந்தியா ஒரே நாடாக இருக்கும். ஒரே மொழி என்று திணித்தால் பல நாடுகள் பிறக்கும். அதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது,'' என, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்று கோரி நடத்தப்பட்ட உண்ணாவித போராட்டத்தில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தமிழை மீட்க வேண்டியதும் - காக்க வேண்டியதும் கடமை. தங்கள் நிலத்தில் தாய் மொழியை பேசுவதற்கும்



வழிபடுவதற்கும் உரிமை உள்ளது. மொழிவாரி மாநிலங்கள் அதற்காகவே பிரிக்கப்பட்டன. இதை பேசினால், பிரிவினைவாதம் பேசுவதாக கூறுகின்றனர்.

இப்போது, நான் சொல்கிறேன். பல மொழிகள் இருந்தால்தான் இந்தியா ஒரே நாடாக இருக்கும். ஒரே மொழி என்று திணித்தால், பல நாடுகள் பிறக்கும். அதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது. இதை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாங்கள் பிரிவினை பேசுகிறோம் என்று சொன்னால் அதை பேசுவதற்கு தூண்டுபவர்கள் ஆட்சியாளர்களே. இந்த போராட்டம் ஒவ்வோர் ஆண்டும் நடக்கிறது. அதிகாரமற்றவர்கள் போராடத்தான் முடியும். அதிகாரத்தில் இருப்பவர்கள் அதை செயல்படுத்தி கொடுக்க வேண்டும்.

அதிகாரம் மிக வலிமையானது. அதை அடைந்து விட்டால், அனைத்தும் எளிதானது. வேண்டிய, விரும்பிய துறைகளை பெற்று, அதிகாரத்தை அனுபவித்தவர்கள், இந்த கோரிக்கையை நிறைவேற்றவில்லை - என்றார். (ஐ)

# அ. தி. மு. க. கட்சியுடன் தே. மு. தி. க. கூட்டணி!

சென்னை, மார்ச் 08

அ. தி. மு. கவில் மக்களவை தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சு நடத்த அமைக்கப்பட்ட குழு சில தினங்களுக்கு முன்பு தே. மு. தி. க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்தை நேரில் சந்தித்து பேச்சு நடத்தியது.

இதைத் தொடர்ந்து கூட்டணி குறித்து பேச்சு நடத்த தே. மு. தி. கவில் குழு அமைத்தது. இரு குழுக்களும் நேற்று முன்தினம் அ. தி. மு. க. தலைமை பணிமனையில் சந்தித்துப் பேசின.

சுமார் ஒரு மணி நேரம் நடந்த பேச்சில் விருதுநகர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட தொகுதிகளை தே. மு. தி. க. கேட்டுள்ளது. இன்னும், இதில் முடிவு எட்டப்படவில்லை.

தே. மு. தி. க. அவைத் தலைவர் இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறும்போது, இந்த பேச்சில் அ. தி. மு. க. - தே. மு. தி. க. கூட்டணி உறுதியாகியுள்ளது. தொகுதி பங்கீடு தொடர்பாக அடுத்தடுத்த கட்ட பேச்சில் முடிவு செய்யப்படும். இப்போதும், எதிர்காலத்திலும் தே. மு. தி. க. கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும் - என்றார்.

# மீண்டும் தமிழகம் வருகிறார் மோடி!

சென்னை, மார்ச் 08

பாராளுமன்ற தேர்தல் திகதி நெருங்கி வரும் சூழலில் பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வரவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி தமிழகம் வந்து பொதுக்கூட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்.

முன்னதாக 2 நாள் பயணமாக கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி தமிழகம் வந்த மோடி, பல்லடம் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார். தொடர்ந்து, கடந்த 4ஆம் திகதி சென்னையில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

இன்படி, இந்த ஆண்டில் 3 மாதங்களில் 5ஆவது முறையாக தமிழ்நாடு வருகிறார் பிரதமர் மோடி. (ஐ)

# தி. மு. க. கூட்டணியிலுள்ள கட்சிகள் அ. தி. மு. கவிடம் போகமாட்டார்கள்!

## துரைமுருகன் தெரிவிப்பு

சென்னை, மார்ச் 08

தி. மு. க. கூட்டணியில் இருப்பவர்கள் அ. தி. மு. க. கூட்டணிக்கு போகமாட்டார்கள் தி. மு. க. கட்சியின் மூத்த தலைவரான துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று விருப்ப மனு வழங்க வந்த துரைமுருகன் தெரிவித்தவை வருமாறு,

வெள்ள பாதிப்பின்போது மக்களுக்கு மாநில அரசு உதவவில்லை என்று பிரதமர் மோடி கூறியிருக்கிறார். வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியவர்கள், பொருள் கொடுத்தவர்கள், சேற்றில் நடந்தவர்களுக்குத்தான் அது பற்றி பேச உரிமை உண்டு. வானத்தில் பறந்து கூட பார்க்காதவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை.

தி. மு. க. கூட்டணி தொகுதி பங்கீட்டில் பாதகம் ஏதும் இல்லை. முடிந்துவிடும். தி. மு. க. கூட்டணியில் இருப்பவர்கள் அ. தி. மு. க. கூட்டணிக்கு போகமாட்டார்கள் -என்றார். (ஐ)

# பா. ஜ. க. கூட்டணியில் சரத்குமாரின் கட்சி!

சென்னை, மார்ச் 08

பாராளுமன்ற தேர்தலுக்காக அனைத்து இந்திய சமத்துவ மக்கள் கட்சி, பாரதிய ஜனதாவுடன் கூட்டணி அமைப்பதாக அந்தக் கட்சியின் தலைவர் சரத்குமார் அறிவித்துள்ளார்.

இதைதொடர்ந்து, மத்திய அமைச்சர் எல். முருகன், எச். ராஜா, தமிழக பொறுப்பாளர் அரவிந்த் மேனன் உள்ளிட்டோர் சரத்குமாரை சந்தித்து பேசினர்.

இந்நிலையில், நரேந்திர மோடியை மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்க பா. ஜ. கவுடன் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. தொகுதி தொடர்பான விவரங்கள் இன்னும் ஒரு வார காலத்துக்குள் தெரிவிக்கப்படும் - என்றார் சரத்குமார். (ஐ)

# அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியோம்

## நாமல் ராஜபக்ஷ சூளுரை

கொழும்பு, மார்ச் 08

**“அச்சுறுத்தி எமது அரசியல் பயணத்தை தடுப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து தீர்மானம் எடுக்கும் அணி அல்ல எமது கட்சி.” - என்று பொது ஜன பெரமுன கட்சியின் பதில் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அச்சுறுத்தல்மூலம் அரசியல் பயணத்தை தடுக்கலாம் என சிலர் நினைக்கின்றனர், மே 9 ஆம் திகதியும் அந்த முயற்சி எடுக்கப்பட்டது. அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்மானம் எடுப்பவர்கள் அல்லர் நாம். மஹிந்த ராஜபக்ச காலத்திலும் அவ்வாறு முடிவெடுக்கவில்லை. இனியும் எடுக்கப்போவதும் இல்லை.

வெற்றிகரமான அரசியல் முடிவுகளையே எடுப்போம். அடுத்து எந்த தேர்தல் என்பது எமக்கு தெரியாது. அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கு முன்னர் பொதுத்தேர்தல் எனக் கூறுகின்றனர். எது எப்படி இருந்தாலும் வெற்றிகரமான ஆட்டத்தையே நாம் ஆடுவோம். அதற்கேற்ற வகையில் அரசியல் முடிவுகளை எடுப்போம்-என்றார். (அ)

# ஜனாதிபதி பாராளுமன்றில் வெளியிட்ட கருத்து பொய்!

## ஹரினி அமரசூரிய குற்றச்சாட்டு




கொழும்பு, மார்ச் 08

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் வெளியிட்ட கருத்து பொய்யானது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை யாரும் பொறுப்பேற்காத காரணத்தினால் தீயில் பாய்ந்து நாட்டை காப்பாற்றியதாக ரணில் கூறுவது முற்றிலும் பொய்யானது.

இவ்வாறான கூற்றுக்களின் மூலம் நாட்டில் ரணிலைத் தவிர்ந்த வேறு மாற்று வழியில்லை என்ற ஓர் நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் உருவாக்க முயற்சிக்கப்படுகிறது.

நாட்டு மக்களுக்கு காணப்படும் ஒரே மாற்று வழி ரணில் தலைமையிலான அரசாங்கம் அல்ல.

மாற்று வழியை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மாற்று வழியில்லை எனக் கூறி அரசாங்கம் ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது-என்றார். (அ)

# இலங்கையில் முதலிட உலக நாடுகள் விருப்பம்!


கொழும்பு, மார்ச் 08

அரசாங்கம் பல்வேறு முக்கியமான வேலைத்திட்டங்களை தற்போது முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில் இந்தியா, சீனா மற்றும் பல்வேறு மேற்கத்தைய நாடுகள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடியால், கடந்த காலத்தில் எவ்வித



மான அபிவிருத்தி திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. ஆனால், தற்போது பொருளாதாரம் ஓரளவு வலுவான நிலைமைக்கு திரும்புவதால் அவசியமான அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சீன அரசின் உதவியின் கீழ் 2000 வீடுகளை அமைப்பதற்கான வேளைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது-என்றார். (அ)

# சீன அரசாங்கத்தின் உதவியுடன் 2000 வீடுகள் அமைக்க நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 08

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் சீன அரசின் உதவியுடன் 2,000 வீடுகளை அமைப்பதற்கான திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன அரசின் உதவியின் கீழ் 2000 வீடுகளை அமைப்பதற்கான திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் மாடிக் குடியிருப்புகளில் வசிப்போருக்கு உரிமத்தை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

வர்த்தக நடவடிக்கைகளில் இருந்து விலகும் கொள்கையின் கீழ் கொழும்பு ஹில்டன் ஹோட்டலை தனியார் துறை முதலீட்டிற்காக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி ஏற்கனவே நான்கு வர்த்தகர்கள் அதற்காக முன்வந்துள்ளனர். ஆனால் அரசாங்கம் எதிர்பார்க்கும் முதலீடு நிச்சயமாக அங்கு கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

எமது அமைச்சின் கீழ் உள்ள ஹயாத் ஹோட்டலின் 50 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ளன. அதற்கான முதலீட்டாளரையும் தேடுகிறோம். டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையின் தாமரை கோபுரத்திலிருந்து லேக்ஹவுஸ் சுற்றுவட்டம் வரையிலான இரு பக்கங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் உள்ள பேரவாவிகளை சுத்தப்படுத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத்துடனான திட்டத்தின் ஆரம்பகட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. அடுத்த மாதம் இத்திட்டம் ஆரம்பிக்கவுள்ளோம்-என்றார். (அ)

# வாகன விபத்துக்களினால் 2 மாதங்களில் 341 பேர் பலி!

கொழும்பு, மார்ச் 08

இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் நாடு முழுவதிலும் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 341 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 324 வாகன விபத்துக்களில் இவ்வாறு மரணங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வாகன விபத்துக்களில் 651 பேர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் 1355 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மோட்டார்சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி விபத்துக்களினால் அதிகளவு உயிர்ச் சேதங்கள் பதிவாகியுள்ளன.

வீதிக் கடவையை பாதசாரிகள் கடக்கும் போது, வீதிக் கடவையில் காலை வைத்தாலே அந்த பாதை பாதசாரிக்கு சொந்தமானது என்பதனை வாகனம் செலுத்துவோர் கவனத்தில் கொண்டு வாகனங்களை செலுத்த வேண்டும்.

பாதையை கடப்பதற்கு பாதசாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# மருமகனின் தாக்குதலுக்கு இலக்காகி மாமனார் பலி!

கொழும்பு, மார்ச் 08

மருமகனின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாமனார் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் ஹொரவபொத்தான பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹொரவபொத்தான, முக்கரவெவ பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது உயிரிழந்தவரின் மகளுக்கும் அவரது கணவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது, இவர் இருவருக்கு இடையில் சமரசத்தை ஏற்படுத்த முயன்றபோது, மகருமகன் அவரை பலமாக தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஹொரவபொத்தான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வெங்காயத்தின் விலை அதிகரிக்கும் அபாயம்!

கொழும்பு, மார்ச் 08

இலங்கைக்கான பெரிய வெங்காய ஏற்றுமதிக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்தால் புத்தாண்டு பண்டிகையின் போது ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 700 அல்லது 800 ரூபாயாக உயரக்கூடும் என வெங்காய இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் பெரிய வெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதேசமயம் வளைகுடா பகுதிக்கான வெங்காய ஏற்றுமதியை பாகிஸ்தான் அரசு நிறுத்தி வருகின்றது.

இந்நிலையில் இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்வது மலிவாக இருப்பதால் இதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவையாக உள்ளது-என்றனர். (அ)

# பொலிஸ் அதிகாரி பணி நீக்கம்

கொழும்பு, மார்ச் 08

கைதான உடப்பு பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி தற்காலிகமாக பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

புத்தளம் - உடப்பு பகுதியில், கிராம மக்கள் சிலர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு நடத்தப்பட்ட குறித்த தாக்குதலை அடுத்து அந்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு முந்தல் பொலிஸார் வரழைக்கப்பட்டனர்.

இதன் பின்னர், உடப்பு காவல்துறை குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி நேற்று முன் தினம் காலை கைது செய்யப்பட்டதுடன் அவரை பணி நீக்கம் செய்ய புத்தளம் பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# மைத்திரி-சம்பிக்க-யாப்பா கூட்டணி குறித்து ஆராய்வு!

## சு.கவை கட்டியெழுப்ப திட்டம்

கொழும்பு, மார்ச் 08

**எதிர்வரும் தேர்தலில் கூட்டணி அமைப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, பாராளுமன்ற உறுப்பினர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோருக்கிடையே விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.**

சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கலந்துரையாடலில் சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால, அதன் சிரேஷ்ட உப தவிசாளரான மகிந்த அமரவீர மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

சுதந்திர கட்சியை பிரதானமாக கொண்டு கட்டியெழுப்பப்படவுள்ள புதிய கூட்டணி தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலை மாணவனால் தாக்கப்பட்ட ஆசிரியர்கள்!

கொழும்பு, மார்ச் 08

பாடசாலை மாணவன் உள்ளிட்ட மேலும் சிலரால் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாக கல்நேவ தேசிய பாடசாலை ஒன்றின் இரண்டு ஆசிரியர்கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த ஆசிரியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கல்நேவ தேசிய பாடசாலையின் இரண்டு மாணவர்களுக்கு இடையில் துடுப்பாட்ட மட்டை தொடர்பில் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, பாடசாலையில் விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவன் ஒருவரை தாக்கியுள்ளார்.

இதன் பின்னர், குறித்த மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆராயும் நோக்கில் விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் அடங்கலாக இரண்டு பேர் மாணவனின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

இதன்போது, வீட்டில் இருந்த பாடசாலை மாணவன் ஒருவர் உள்ளிட்ட தரப்பினர் இரு ஆசிரியர்களையும் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 63 வருடங்களின் பின் இலங்கை எரிசக்தி துறையில் நுழைகிறது 'ஷெல்' நிறுவனம்!

கொழும்பு, மார்ச் 08

அறுபத்து மூன்று வருடங்களின் பின்னர் ஷெல் நிறுவனம் மீண்டும் இலங்கையின் எரிசக்தித் துறையில் இணையவுள்ளதுடன், அந்த நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் கப்பல் இம்மாதம் 19ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு பிரவேசிக்கவுள்ளது.

1880ஆம் ஆண்டு முதல் இலங்கையில் இயங்கி வந்த ஷெல் எரிபொருள் நிறுவனத்தை 1961ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சி அரசாங்கம் கைப்பற்றியது.

அதன் பின்னர் ஆசியாவில் தமது செயற்பாடுகளை இலங்கையிலிருந்து அகற்றி சிங்கப்பூரில் ஆரம்பித்து இன்று சிங்கப்பூரில் மாபெரும் நிறுவனமாக மாறியுள்ளது.

இது சிங்கப்பூரை எரிசக்தித் துறையில் அதிகார மையமாக மாற்ற உதவியது.

அரசாங்கத்தின் எரிசக்தி மற்றும் பொருளாதார சீர்தி ருத்த திட்டத்தின் கீழ், ஷெல் எரிபொருளை இறக்குமதி செய்யவும், சேமிக்கவும் மற்றும் விநியோகிக்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதற்காக 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

புதிய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடங்க ஐம்பது உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# இடைநிறுத்தப்பட்ட ரயில்வே ஊழியர்கள் மீளவும் சேவையில்

கொழும்பு, மார்ச் 08

வெளிநாட்டவர்கள் இருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் இடைநிறுத்தப்பட்டிருந்த ரயில்வே ஊழியர்கள் மூவர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் மேலதிக ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் செல்லும் ரயிலில் குளிரூட்டப்பட்ட முதல் வகுப்பு பெட்டியில் இரண்டு வெளிநாட்டினர் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்ததால் தீவிரநிலை ஏற்பட்டிருந்தது.

இச்சம்பவத்தின் அடிப்படையில் இரண்டு ரயில் நிலைய அதிபர்கள், ரயில் கட்டுப்பாட்டாளர் மற்றும் ரயில் பாதுகாப்பு திணைக்கள உறுப்பினர் ஒருவரின் சேவையை இடைநிறுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பிலான முதற்கட்ட அறிக்கை கோரப்பட்டதன் பின்னர் மேலதிக விசாரணைகளுக்கு உட்பட்டு இரண்டு ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் புகையிரத கட்டுப்பாட்டாளர் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இடைநிறுத்தப்பட்ட நாவலப்பிட்டி ரயில் நிலைய பாதுகாப்பு அதிகாரியின் பணி இடைநிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் உள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# புதிய மின் இணைப்பு கட்டணத்தை தவணை முறையில் செலுத்த வசதி

கொழும்பு, மார்ச் 08

புதிய மின் இணைப்புக்காக அறவிடப்படும் கட்டணத்தை பயனாளர்கள் தவணை முறையில் செலுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படவுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

வாய்மூல பதிலை எதிர்பார்த்து, பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம் தர்மசேன நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நுகர்வோரின் நலனை கருத்திற் கொண்டு புதிய மின் இணைப்புக்கான கட்டணத்தை தவணை முறையில் செலுத்துவதற்கான திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிட்டார்.

அத்துடன், இதற்காக பயனாளர்கள் புதிய மின் இணைப்புக்கான மொத்த கட்டணத்தில் 25 வீதத்தை செலுத்தவேண்டும்.

எஞ்சிய கட்டணத்தை 10 அல்லது 12 மாதங்களில் செலுத்த முடியும்.

இதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளதுடன், உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, மின்சார பட்டியலுக்கான கட்டணத்தைச் செலுத்தாதவர்களுக்கான மின் துண்டிக்கப்பட்டு மீள் இணைப்பதற்கான அபராதத்




தொகையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, வலுசக்தி அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கமைய, 1,300 ரூபாயாக காணப்பட்ட குறித்த அபராத தொகையை 800 ரூபாயாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# யாழில் பரசூட் சாகசம் நடந்தபோது விபத்தில் சிக்கிய விமானப்படை வீரர்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

விமானப்படையினரால் நடத்தப்பட்ட பரசூட் சாகசத்தின்போது எதிர்பாராத விதமாக விமானப்படை சாகச வீரரொருவர் கீழே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு வான் சாகசம் 2024 என்ற கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் பரசூட் சாகசத்தில் ஈடுபட்ட வீரர் ஒருவர் கீழே விழுந்து விபத்துக்குள்ளானார். எனினும் அவருக்கு பாரதூரமான பாதிப்புக்கள் எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நாட்டின் 76ஆவது சுதந்திரதினத்திற்கான பயிற்சி சாகச நிகழ்வின்போதும் இவ்வாறானதொரு விபத்துச் சம்பவம் இடம்பெற்றிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# வீழ்ச்சியடையும் ரூபாயின் பெறுமதி!

கொழும்பு, மார்ச் 08

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 303 ரூபாய் 09 சதம் விற்பனை பெறுமதி 312 ரூபாய் 43 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 197 ரூபாய் 10 சதம், விற்பனை பெறுமதி 207 ரூபாய் 52 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 222 ரூபாய் 52 சதம், விற்பனை பெறுமதி 232 ரூபாய் 70 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 340 ரூபாய் 34 சதம், விற்பனை பெறுமதி 357 ரூபாய் 67 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 328 ரூபாய் 74 சதம், விற்பனை பெறுமதி 342 ரூபாய் 17 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 2 ரூபாய் 03 சதம், விற்பனை பெறுமதி 2 ரூபாய் 11 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 224 ரூபாய், 97 சதம் விற்பனை பெறுமதி 235 ரூபாய் 21 சதம் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் செய்தி; இணையத்தள உரிமையாளருக்கு மறியல்!

கொழும்பு, மார்ச் 08

இராணுவத்தினரை அவமதிக்கும் வகையிலும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் விதத்திலும் செய்தி வெளியிட்ட இணையத்தள உரிமையாளர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கணினி குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கைதான சந்தேகநபர் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேயிடம் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போது அவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்ட பிணை கோரல் நீதவானினால் நிராகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ரணில்!

## மனுஷ நாணயக்கார பாராட்டு

கொழும்பு, மார்ச் 08

**ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராக களமிறங்குவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

காலி பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக களமிறங்குவார்.

தேசிய வேட்பாளராக பொது வேட்பாளராக தேசிய கொள்கைகளுடனான வேட்பாளராகவே அவர் களமிறங்குவார். எனவே கட்சி ரீதியாகவும் தனிநபராகவும் அமைப்புக்கள் சார்பாகவும் ஒத்துழைப்பு வழங்க முடியும்.

ஏனென்றால் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சிந்தித்து சிறந்த கொள்கை திட்டங்களுடனேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க களமிறங்குவார். வங்குரோத்து நிலையில் இருந்து ஒன்றரை வருடகாலத்திற்குள் நாட்டை மீட்டெடுத்தவர் ரணில் விக்ரமசிங்க. அவரால் தான் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்களும் அறிவர்-என்றார். (அ)



# இலங்கையில் 62 இலட்சம் தெருநாய்கள்

கொழும்பு, மார்ச் 08

இலங்கையில் 62 இலட்சம் தெருநாய்கள் இருப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

இது சுற்றுலாப் பிரதேசங்களில் மிகவும் பாரதூரமான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த தென்னக்கோன், இது தொடர்பில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

விலங்குகளினால் ஏற்படும் சேதங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக அரசாங்கம் புதிய சட்டத்தை கொண்டு வந்துள்ளதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறினார்.

# தன்சானியாவில் விபத்து; இரு இலங்கையர்கள் பலி

கொழும்பு, மார்ச் 08

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள தன்சானியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இலங்கையைச் சேர்ந்த இளைஞர்கள் உயிரிழந்துள்ளார்கள்.

இரு இளைஞர்களும் தன்சானியாவில் தாருஸ் சலாம் நகரிலிருந்து மஹேங்கே நகருக்கு பயணித்துக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக சர்வதேச ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்தவர்களில் ஒருவர் காலி கொட்டுகொட பகுதியை சேர்ந்த 23 வயதுடையவர் எனவும், மற்றையவர் காலி மகுலுவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# ஹரக் கட்டாவை தப்ப வைக்க முயற்சித்த சார்ஜன்ட் கைது!

கொழும்பு, மார்ச் 08

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற செயல்களுடன் தொடர்புடைய ஹரக் கட்டா எனப்படும் நதுன் சிந்தக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இருந்து தப்பிச் செல்ல உதவி புரிந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கையடக்க தொலைபேசி தரவு பகுப்பாய்வு பிரிவு ஊடாக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர் கைதானார்.

வெளிநாட்டில் இருந்து செயற்பட்ட மிதிகம ருவன் என்ற ருவன் சாமரவுடன் ஹராக் கட்டா தப்பிச் செல்வதற்கான சூழ்ச்சியை பொலிஸ் சார்ஜன்ட் வட்ஸ்அப் ஊடாக மேற்கொண்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மிதிகம பகுதியில் கைதான 36 வயதான பொலிஸ் சார்ஜன்ட் திக்கும்புர பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வல்வை முதியோர் இல்லத்தின் செயல்பாடுகளை உடனடியாக நிறுத்த வடக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், மார்ச் 08

வல்வெட்டித்துறையில் எவ்வித அனுமதியும் இன்றி செயற்படும் முதியோர் இல்லத்தின் நடவடிக்கைகளுக்குத் தடைவிதிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விடுத்த பணிப்புரைக்கு அமைய, ஆளுநரின் செயலாளரால் பருத்தித்துறை பிரதேச செயலாளருக்குக் கடிதம் ஊடாக அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வல்வை முதியோர் இல்லம் எவ்வித வசதிகளும் இன்றியும் இதுவரை பதிவு செய்யாமலும் இயங்கியமை தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வல்வை முதியோர் இல்லம் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும் "அபயம்" 24 மணித்தியால குறைகேள் வலையமைப்பிற்கு முறைப்பாடு கிடைத்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் பருத்தித்துறை பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட கள விஜய அறிக்கை ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த வடக்கு மாகாண ஆளுநர் குறித்த முதியோர் இல்லம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முல்லைத்தீவில் இன்று பெரும் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 08

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்கள் உறவுகளை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி மேற்கொண்டு வரும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று சர்வதேச மகளிர் தினம் முன்னெடுக்கப்படுகின்ற அதேவேளை தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு நடைபெற்று வருகின்றது.

இலங்கையில் பெண்களாகிய நாம் இன்னமும் எமது உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நடாத்தப்படவுள்ளது என்பதுடன் கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பாகவும் விரைவான தீர்வு வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்தார். (அ)

# இடமாற்ற நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 08

மாகாண அரச சேவையில பணியாற்றும் நிரந்தர உத்தியோகத்தர்களை மத்திய அரசாங்கத்தில் உரிய பதவிக்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கையினை இடைநிறுத்த அரசசேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதானிகளுக்கு அரசசேவை ஆணைக்குழு சுற்றறிக்கையினூடாக அறிவித்துள்ளது.

முன்னதாக மாகாண அரச சேவையில் பணியாற்றும் நிரந்தர பணியாளர்களாக கடமையாற்றுவோர் மத்திய அரசாங்கத்தில் உரிய பதவிக்கு இடமாற்றம் செய்வதற்கு 2020 ஆண்டு அரசசேவை ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த நடைமுறை அரசசேவைகள் ஆணைக்குழுவினால் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# "சாந்தனைக் குடும்பத்துடன் இணைப்பதற்கு பல வழிகளில் முயன்றும் பயனளிக்கவில்லை"

## சபையில் கஜேந்திரன் எம்.பி

கொழும்பு, மார்ச் 08

சாந்தனை இலங்கையிலுள்ள அவரது குடும்பத்துடன் இணைக்க பல்வேறு வழிகளில் முயன்றும் அம் முயற்சி பலனளிக்கவில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்தவையாவன,

33 ஆண்டுகள் சிறைதண்டனை அனுபவித்த பின்னர் இந்திய நீதிமன்றினால் விடுவிக்கப்பட்ட சாந்தனை குடும்பத்தோடு உடனடியாக இணைக்கப்படவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் கடந்த ஜனவரி மாதம் 03ஆம் திகதி கொழும்பிலுள்ள இந்திய துணைத்தூதரோடு இடம்பெற்ற சந்திப்பில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதேவேளை, சாந்தனை உடனடியாக குடும்பத்துடன் இணைப்பதற்கும் சிகிச்சைகளை வழங்குவதற்கும் உரிய ஏற்பாடுகளை செய்யுமாறு கோரியும் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி கடிதமொன்றை எழுதியிருந்தோம். அதேவேளை 30 ஆம் திகதி இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கும் குறித்த விடயம் தொடர்பில் வட்சப் மூலம் கடிதமொன்றை அனுப்பியிருந்தோம். அதேவேளை வெளிநாட்டு இராஜாங்க அமைச்சருக்கும் குறித்த கடிதத்தை அனுப்பிவைத்திருந்தோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது தொடர்பில் அதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத காரணத்தினாலே சாந்தனுடைய உயிர் அநியாயமாக பிரிந்திருக்கின்றது. அவரது சாவுக்கு இந்திய இலங்கை அரசுகள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

அதேவேளை ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்ற இலங்கையை சேர்ந்த முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயஸ் ஆகியோர் தற்போதும் திருச்சி சிறப்பு முகாமிலே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் மூவரும் வெளிநாடு செல்வதற்கு விரும்புகின்றனர். அதேவேளை முருகன் இலங்கை கடவுச் சீட்டுக்கு விண்ணப்பித்திருப்பதாக அவர்களது சட்டத்தரணி மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

எனவே, அவர்களுக்குரிய ஆவணங்களை வழங்குவதற்கு இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மதுரை உயர்நீதிமன்றிலே வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தமிழக அரசின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இவர்கள் மூவரையும் நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு அவர்களை இங்கே அனுப்புவது தொடர்பில் உரையாடுவதற்கு தொடர்பு கொண்டிருப்பதாகவும், ஆனால் இலங்கை அரசிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லை எனவும் மத்திய அரசு சார்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுத்து அவர்களை குடும்பங்களோடு இணைந்து வாழ்வதற்குரிய சூழல் உருவாக்கப்படவேண்டும்.

அவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல விரும் பினால் அவர்கள் விரும்பும் நாட்டுக்கு செல்வதற்கான ஏற் பாடுகள் செய்யப்படவேண்டும். தொடர்ந்தும் இந்த இரு அர சாங்கங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக உயிர் கள் அநியாயமாக இழக்கப்ப டுவது தடுக்கப்படவேண்டும்-என்றார்.(அ)

# அம்பாறை மாவட்டத்தில் நடந்த சமாதான மாநாடு!




**அம்பாறை, மார்ச் 08**

**கப்சோ அமைப்பினால் அப்பாறை மாவட்டத்தில் உள்ள மாளிகைக்காடு தனியார் மண்டபத்தில் சமாதான மாநாடொன்று அண்மையில் நடத்தப்பட்டது.**

இனங்களுக்கிடையிலான சமாதானத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே குறித்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

கப்சோவின் திட்டப்பணிப்பாளர் ஏ. ஜே காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் வரலாற்றில் முதல் முறையாக இலங்கைக்கான சுவிஸ்லாந்து தூதுவர் சிறி வால்ட், ஜப்பானிய தூதுவர் மிஸூகோஷி ஹிடேக்கி, இலங்கைக்கான தென்னபிரிக்க தூதுவர் சண்டில் எட்வின் ஸ்கல்க் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததோடு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சமூகத்தலைவர்கள், எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தனர்.

(அ)

# மாணவர்களுக்கு ஊடக செயலமர்வு






அம்பாறை, மார்ச் 08

சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் ஏற்பாட்டில் நவீன தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் எனும் தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வு காத்தான்குடி சம்மேளனத்தின் ஷேகுல் பலாஹ் கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் பொதுச்செயலாளர் இப்றான்ஸா பவ்றுத்தீன் தலைமையில் இடம்பெற்ற இச் செயலமர்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம்.ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந் நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்ட சுதந்திர ஊடக கண்காணிப்பு மையத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.நௌஷாத் மொஹிதீன் ஊடகத்தின் முக்கியத்துவம் , தனிமனித வாழ்வில் ஊடகங்களின் வகிபாகங்கள், நாட்டின் ஜனநாயகத்திற்கு ஊடகத்தின் பங்களிப்பு போன்ற தலைப்புக்களில் மாணவர்களுக்கு விரிவுரை வழங்கினார்.

இந் நிகழ்வில் நூற்றுக்கு அதிகமான பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியதோடு அவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# மீன்பிடி அமைச்சரை சந்தித்தார் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்



கொழும்பு, மார்ச் 08

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பிலுள்ள கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.


திருகோணமல் பொது மீன் சந்தை, கிண்ணியா மீன் சந்தை தொடர்பாக இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், மட்டக்களப்பு வட்டவான் , கொக்கட்டிச் சோலை ஆகிய இடங்களில் இறால் பண்ணை தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார்.

இக் கலந்துரையாடலின் போது திருகோணமலை நகர சபை செயலாளர்,கிண்ணியா நகரசபை செயலாளர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர், இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(அ)

# கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர் அன்னமலை வைத்தியசாலைக்கு விஜயம்



அம்பாறை, மார்ச் 08

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் சகீலா இஸ்ஸடீன், பிராந்திய திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் ஆகியோர் அன்னமலை பிரதேச வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையின் நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது பி.எஸ்.எஸ்.பி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் அமையப் பெறவுள்ள மருந்தகம் தொடர்பாகவும் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் கலந்துரையாடிய பணிப்பாளர், புதிய கட்டடத்தில் மருந்தகத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளர் பிரிவு, களஞ்சியசாலை, விடுதி மற்றும் மருந்தகத்தினையும் பார்வையிட்டனர். (அ)

# மக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாம் !



அம்பாறை, மார்ச் 08

இறக்காமம் பிரதேச செயலக பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் கீழ் இறக்காமம்-05 ஆம் பிரிவு நியூ குன பிரதேசத்தில் இயங்கும் யஷோதரா மகளிர் சங்கமும், உளச் சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனமும் இணைந்து பொது மக்களின் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் மகிழ்ச்சி முகாமை ஏற்பாடு செய்திருந்தன.

அந்த கிராமத்தில் உள்ள முதியவர்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள், விசேட தேவையுடையவர்கள், கணவன் மனைவி மற்றும் பிள்ளைகள் என அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் இம் மகிழ்ச்சி முகாம் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ். எம். றஷ்ஷான் (நளீமி) கலந்து கொண்டார்.

மேலும் உளச் சுகாதார முன்னேற்றத்திற்கான நிறுவனத்தின் தலைவரும் சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவனத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பிரகீத், மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுரேகா எதிரிசிங்க, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.கே. சாஜிதா மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இம் மகிழ்ச்சி முகாமில் உளவியல் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள், மகிழ்ச்சிகரமாக வாழும் கலை, முரண்பாடுகளை இனங்காணலும் முகாமை செய்தலும், இளைஞர்களுக்கான வழிகாட்டல்கள் நிகழ்வுகள், குழுப் பயிற்சி மற்றும் செயற்பாடுகள், சிறுவர் விளையாட்டுகள், சித்திரம் வரைதல் போட்டிகள் மற்றும் கலை கலாசார நிகழ்வுகள் என்பன நடைபெற்றன.

(அ)

# அகதிகள், புலம்பெயர்ந்தோர் மோசமான தடுப்பு முகாம்களில்

## மலேசியா மீது மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு



**கோலாலம்பூர், மார்ச் 08**

**மலேசியாவில் ஆயிரக்கணக்கான அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் வன்முறை, மோசமான தடுப்பு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.**

அத்துடன், அவர்கள் அங்கு அடிப்படைத் தேவைகளை இழந்து சில சமயங்களில் சித்திரவதைக்கு உள்ளாக்குவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

குறித்த தடுப்பு முகாமில் இருந்து வெளியேறியவர்களிடையே மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று முன் தினம் இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தது.

இதன்படி, 23 பேர் குறித்த மையங்களை அடக்குமுறை இடமாக அடையாளப்படுத்தியுள்ளதுடன், அங்கு அவர்கள் தினசரி தண்டனை மற்றும் அச்சுறுத்தலை எதிர்கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், சூரியனை தம்மால் பார்க்க முடியாது எனவும், பல கைதிகள் அடித்து துன்புறுத்தப்படுவதனை தாம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் விசாரணையில் குறிப்பிட்டுள்ளனர்.

பிளாஸ்டிக் குழாய் அல்லது தடியால் அடித்தல், உதைத்தல், சுவரில் தொங்கவிடுதல், தனிமைப்படுத்தல், உணவு வழங்காமை உள்ளிட்ட பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

(அ)

# செங்கடலில் சரக்குக் கப்பலின் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

## மூன்று பேர் உயிரிழப்பு



நியூயோர்க், மார்ச் 08

செங்கடலில் சரக்கு கப்பல் மீது ஹூதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 3 பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நால்வர் காயமடைந்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

யேமனின் ஏடன் துறைமுகத்தில் இருந்து 50 கடல் மைல் தொலைவில் டீயசடியனழுள கொடியுடன் பயணித்த கப்பல் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது 20 பணியாளர்கள் மற்றும் 3 பாதுகாப்பு தரப்பினர் கப்பலில் இருந்துள்ளனர்.

அவர்களில் இருவர் இலங்கையர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

தாக்குதலை தொடர்ந்து கப்பலில் தீப்பரவல் ஏற்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

கப்பலில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், கப்பலில் இருந்த இலங்கையர்கள் தொடர்பில் கடற்படை மற்றும் வெளிவிவகார அமைச்சிடம் வினவிய போது, தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் இருந்த இலங்கையர்கள் தொடர்பில் தகவல்கள் பெறப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# அமெரிக்க ஜனாதிபதியை நேரலை விவாதத்துக்கு அழைக்கும் ட்ரம்ப்!



நியூயோர்க், மார்ச் 08

அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நேரலை விவாதம் ஒன்றிற்கு வருமாறு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தலைவருடன் எந்தவொரு நேரத்திலும் நேரடி விவாதத்தில் பங்கேற்க தாம் தயாராக உள்ளதாகவும் டொனால்ட் ட்ரம்ப் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்னதாக நேரடி விவாதங்களில் பங்கேற்பது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதுவித கருத்தினையும் வெளியிடவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் அமெரிக்க குடியரசுக்கட்சியின் வேட்பாளர் போட்டியில் இருந்து இந்திய வம்சாவளியை சேர்ந்த நிக்கி ஹேலி வெளியேறியதை தொடர்ந்து டொனால்ட் ட்ரம்ப குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்த போது ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்க தூதராக நிக்கி ஹேலி பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமெரிக்காவில் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்டசி வேட்பாளர் ஜோபைடனுக்கு எதிராக குடியரசுகட்சியின் சார்பில் களமிறங்கவுள்ளதாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போர்க்குற்றங்களுக்காக 2 ரஷ்ய தளபதிகளை கைது செய்ய சர்வதேச நீதிமன்றம் உத்தரவு!

ஹேக், மார்ச் 08

உக்ரைனில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக, ரஷ்யாவின் உயர்மட்ட தளபதிகளான செர்ஜி கோபிலாஷ் மற்றும் விக்டர் சோகோலோவ் ஆகியோரை கைது செய்வதற்கான உத்தரவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்(ஐ.சி.சி) பிறப்பித்துள்ளது.

உக்ரைன் படையெடுப்பு தொடர்பான ரஷ்ய அதிகாரிகளுக்கு எதிராக ஐசிசி பிறப்பித்துள்ள இரண்டாவது சுற்று கைது உத்தரவில், இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கோபிலாஷ் மற்றும் கடற்படை அட்மிரல் சோகோலோவ் ஆகியோர் பெயரிடப்பட்டனர்.

ஹேக்கை தளமாகக் கொண்ட ஐசிசி, ஒரு அறிக்கையில், "குறைந்தது 10 ஒக்ரோபர் 2022 முதல் குறைந்தது 9 மார்ச் 2023 வரை உக்ரேனிய மின்சார உள்கட்டமைப்புக்கு எதிராக அவர்களின் கட்டளையின் கீழ் உள்ள படைகளால் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இருவரும் பொறுப்பு என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன" என்று கூறியது.




அது மேலும் தெரிவிக்கையில்-

இந்த காலக்கட்டத்தில், உக்ரைனில் பல இடங்களில் ரஷ்ய ஆயுதப்படைகளால் நடத்தப்பட்ட ஏராளமான மின்சார மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் துணை மின்நிலையங்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப்பட்டன-என்றது.

இந்த தாக்குதல்கள் பொது மக்களுக்கு தீங்கு விளைவித்தது மற்றும் சேதத்தை ஏற்படுத்தியது என்று நீதிமன்றம் குறிப்பிட் டது.

இருப்பினும், ரஷ்யா ஐ.சி.சியை அங்கீகரிக்காததால், குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள ரஷ்ய தளபதிகள் நாடு கடத்தப்பட வாய்ப்பில்லை.

2022 ஆம் ஆண்டில், ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் குழந்தைகள் உரிமைகளுக்கான ரஷ்யாவின் ஜனாதிபதி ஆணையர் மரியா லவோவா-பெலோவா ஆகியோரையும் ஐ.சி.சி கைது செய்ய உத்தரவிட்டது. (அ)

# மெக்ஸிக்கோ பல்கலைக்குள் கத்திக்குத்து தாக்குதல்!

## இரு பெண்கள் பலி

மெக்ஸிக்கோ சிற்றி, மார்ச் 08

மெக்ஸிக்கோ பல்கலைக்கழகத்தில் இளைஞனொருவன் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

குவாதலாஹாரா நகரிலுள்ள பல்கலைக்கழகமொன்றில் புதன் கிழமை (06) இச்சம்பவம் இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

20 வயதான ஓர் இளைஞனே தாக்குதல் நடத்தியதாகவும், அவ்விளைஞனும் இச்சம்பவத்தில காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலுக்கான காரணம் என்னவென்பது தெரியவில்லை என ஜாலிஸ்கோ மாநில வழக்குத்தொடுநர் கூறியுள்ளார்.

சந்தேக நபரான இளைஞனை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

(அ)

# திருடர்கள் கூட்டத்துக்குள் குதித்துள்ளார் ஜனாதிபதி

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 08

**வீழ்ச்சியடைந்த நாட்டை பாதுகாக்க யாரும் முன்வராத நிலையில் தான் அந்த நெருப்பு பிழம்பில் குதித்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் அவர் நெருப்பு பிழம்பில் குதிக்கவில்லை மாறாக திருடர்கள் குழுவில் குதித்துள்ளார். அவர் நாட்டை வீழ்ச்சியடையச் செய்தவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம், நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம், ஈட்டுச் சட்டம் (திருத்தச்) சட்டமூலம், நிதி குத்தகைக்குவிடுதல் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி சபையில் ஆற்றிய உரையில் புத்தரின் உன்னத வார்த்தைகளை பிரயோகித்து அவரது தொலைநோக்கு பயணத்தை நனவாக்க பெரும் முயற்சியை மேற்கொண்டார். தொங்கு பாலம் குறித்து பேசிய ஜனாதிபதி வங்குரோத்து நிலையை ஏற்படுத்தியவர்களை பாதுகாத்து வருகிறார்.

நாட்டில் வங்குரோத்து நிலையை ஏற்படுத்திய பேரழிவை உருவாக்கியவர்களிடமிருந்து நாட்டு மக்களுக்கு நட்டஈடு பெறுவதற்கான வசதிகளைக்கூட தற்போதைய ஜனாதிபதியே நிறுத்தியுள்ளார்.

பேரழிவை உருவாக்கிய தலைவர்கள் திருடிய சொத்துக்களையும் இந்த ஜனாதிபதியே பாதுகாத்து வருகிறார். நாட்டை சீரழித்த ராஜபக்ஷக்கள் அந்த தொங்குபாலத்தில் மேலே வர உதவுபவரும் ஜனாதிபதியாகும். அதனால் ஜனாதிபதியின் செயற்பாடுகளால் 220 இலட்சம் மக்கள் நிர்க்கதியாகியுள்ளனர்.

அத்துடன் நாட்டை பாதுகாக்க பாரிய தீ பிழம்புக்குள் பாய்ந்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் அவர் உண்மையில் பாய்ந்தது தீ பிழம்புக்குள் அல்ல. திருடர்கள் கூட்டத்திற்குள் ஆகும். ஒருபோதும் தனக்கு வாக்குகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாததை திருடர்கள் மூலம் பெற்றுக்கொண்டுள்ளார். நிகழ்நிலைக் காப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் மூலம் ஒடுக்குமுறைகளை செய்ய முயற்சிக்கிறார்.

அத்துடன் ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவையை நிறைவேற்றுத்துறையின் பொம்மையாக மாற்ற முயற்சிக்கிறார். சபாநாயகருடன் இணைந்து அரசியலமைப்பை சீர்குலைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எந்த கருத்தும் இப்போது கூறுவதில்லை. தொங்கு பாலத்தில் ஏறி மேலே வந்தவர்கள் நாட்டை சீர்குலைத்த ராஜபக்ஷ குழுக்களே ஆகும்.

எவ்வாறாயினும் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வை ஐக்கிய மக்கள் சக்தி தயாரித்துள்ளது. பொருளாதார முன்னேற்றம் தொடர்பான வேலைத்திட்டத்தையே எதிர்பார்த்துள்ளோம். அனைவரையும் இணைத்துக் கொண்ட தேசிய அபிவிருத்தி திட்டத்தை எமது அரசாங்கத்தில் நாங்கள் ஏற்படுத்துவோம்- என்றார். (அ)

# கத்திரிக்காய்களில் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சி மருந்து!

## ஜெயவர்தனபுர பல்கலை ஆய்வில் கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 08

சந்தையில் விற்பனைக்குக் கிடைக்கும் கத்திரிக்காய்களில் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லி மருந்துகள் இருப்பது தெரியவந்துள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உணவு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நடத்திய ஆய்வில், சந்தையில் இருந்து எடுக்கப்படும் புதிய கத்தரிக்காய் மாதிரிகளில் 23 வீதம் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிக்கொல்லி எச்சங்கள் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

எனவே காய்கறிகள் மற்றும் பழங்களை குளிர்ந்த நீரில் கழுவுவதற்குப் பதிலாக, வினிகர் அல்லது உப்பு சேர்த்து கழுவ வேண்டும். இதன் மூலம் இரசாயனங்களை அகற்ற முடியும்.

மேலும் காய்கறிகள் மற்றும் பழங்களின் வெளிப்புறத் தோலை அகற்றுவதன் மூலம் உணவில் உள்ள நச்சு இரசாயனங்களை எளிதில் அகற்ற முடியும் என்று ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் அறிவியல் தொழில்நுட்பத் துறையின் மூத்த விரிவுரையாளர் டாக்டர். ஏ. அபேசுந்தர தெரிவித்துள்ளார். (அ)

# பாலியல் குற்றவாளிகளின் பெயர்ப் பட்டியல் விரைவில்!

கொழும்பு, மார்ச் 08

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பங்களின் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நபர்களின் பட்டியலைத் தயாரிக்க எதிர்பார்ப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குறித்த நபர்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் அபாயத்தை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகார சபையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த வருடத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் ஓரளவு வளர்ச்சி காணப்படுவதாகவும் அமரசிங்க குறிப்பிட்டார்.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 1,618 சம்பவங்கள் பதிவாகியுள்ளன, இது 2023 ஆம் ஆண்டில் 1,639 ஆக காணப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் 1,232 பாலியல் சீண்டல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், 2023 ஆம் ஆண்டில் அவ்வாறான சம்பவங்கள் 1,497 ஆக அதிகரித்துள்ளதாகவும் உதய குமார அமரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# 86 கிராமங்களில் 45,000 இளநீர் கன்றுகளை நட விசேட திட்டம்!

கொழும்பு, மார்ச் 08

நமது நாட்டில் இளநீர் செய்கையை விரிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க தெங்கு செய்கை சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி நாட்டில் இளநீர் செய்கைக்கு ஏற்ற 86 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் உற்பத்திக்கான காரணங்களை ஆராய்ந்து மேற்படி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

எமது நாட்டு இளநீருக்கு சர்வதேச சந்தையில் பாரிய தேவை உருவாக்கப்பட்டுள்ளதுடன் சர்வதேச சந்தையில் இளநீர் மீதான ஏகபோக உரிமையை இலங்கை கொண்டுள்ளது. இதற்குக் காரணம், நம் நாட்டில் இளநீர்களின் சுவையும், தரமும் மிக அதிகம்.

மேலும், பல நாடுகள் இளநீர் செய்கைக்கு முயற்சித்த போதிலும், இலங்கை இளநீரின் தரத்தை பெற முடியவில்லை. எனவே, நம் நாட்டில் இளநீருக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இளநீர் செய்கையை ஒரு பயிராக பிரபலப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்றது.

தென்னை பயிர்ச்செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கைக்கு 50 தொன் பேரீச்சம்பழங்களை அன்பளிப்பாக வழங்கியது சவூதி அரேபியா

கொழும்பு, மார்ச் 08

சவூதி அரேபியாவின் மன்னரின் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் 50 தொன் பேரிச்சம்பழங்களைக் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது, சவூதி தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி, இலங்கை அதிகாரிகளிடம் இந்த பேரிச்சம்பழங்களை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன மற்றும் முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் இவை வழங்கப்பட்டன.



சவூதி அரேபிய இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அமீர் அஜ்வாத் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் பல அதிகாரிகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் தூதரக அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# புதிய திருத்தங்களுடன் 'அஸ்வெசும'!

கொழும்பு, மார்ச் 08

அஸ்வெசும நலன்புரி முறைமையின் ஊடாக, மாற்றுத் திறனாளிகளுக்கும், சிறுநீரக நோயாளிகளுக்கும், முதியோர் உதவி பெறும் நபர்களுக்கும் விசேட கொடுப்பனவை வழங்க நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இது தொடர்பான கொடுப்பனவுகள் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உதவி பெறும் மாற்று திறனிகளைக் கொண்ட 410,000 பேருக்கு தலா 7,500 ரூபா மாதாந்த கொடுப்பனவும், சிறுநீரக உதவி பெறும் 50 ஆயிரம் பேருக்கு தலா 7,500 ரூபா கொடுப்பனவும், முதியோர் உதவி பெறும் 820,000 பேருக்கு தலா 3,000 ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளதாக நிதிய மைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மத்திய வங்கி அலுவலக உதவியாளர் சம்பளம் அதிகரிக்கப்பட்டு ரூ.188,827!

கொழும்பு, மார்ச் 08

மத்திய வங்கியின் மிகக் குறைந்த தரவரிசையில் பணிபுரியும் அலுவலக உதவியாளரின் தரம் 1 இற்கான மொத்த சம்பளம் 29.53 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டு ரூ.188,827 ஆகவுள்ளது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பிரதி ஆளுநரின் மொத்த சம்பளம் ரூபா 76.97 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அது ரூ. 1,728,419 ஆக உயர்ந்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பிரதமர் பதிலளித்தார்.

மத்திய வங்கி ஊழியர்களுக்கு வீட்டுக் கடன்கள், வாகனக் கடன்கள், நலன்புரி கடன்கள் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவற்றுக்கும் உரிமை உண்டு என்று பிரதமர் கூறினார். (அ)

## சுழிபுரத்தில்...

எதிர்ப்புகள் எழுந்த நிலையில் அங்கு வைக்கப்பட்டிருந்த புத்தர் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிராக இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றும் அந்தப் பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னார்...

செய்யக்கூடும் என்று எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் விதமாகவே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காற்றாலை மின் திட்டத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து எச்சரித்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சம்பத் செனவிரத்னவுடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

காற்றாலை மின் திட்டம் அமைக்கப்படும் பகுதியில் பறவைகள் வழித்தடம் உள்ளதா எனத் தெரியவில்லை. விடயம் தொடர்பில் பேராசிரியருடன் கலந்துரையாடுவேன் - என்றார். (ஐ)

## சுருண்டது...

யாழ்ப்பாணத்தின் பெருந் துடுப்பாட்டப் போட்டிகளில் முதலாவது என்ற பெருமைக்குரிய இந்த போட்டிக்கு இது 117ஆவது ஆண்டாகும். இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, ஆடிய அந்த அணிக்கு நியூட்டன், சிந்துஜன் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். நியூட்டன் அடித்தாட மறுமுனையில் சிந்துஜன் பொறுமை காத்தார். 26 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது 25 பந்துகளை எதிர்கொண்ட சிந்துஜன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரிலேயே நியூட்டன் 19 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த டெரிக்சன் , சிமில்ரன் ஆகியோர் பொறுமை காத்தனர். எனினும் இருவரும் 15, 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அடுத்து வந்த அபிஷேக் 10 ஓட்டங்களுடன் வீழ்ந்தார்.

ஆறாவது வீரராக களமிறங்கிய சயந்தன் நிதானமாகவும் சிறப்பாகவும் ஆடினார். பந்துகளை தெரிவு செய்து ஆடினார். எனினும் மறுமுனையில் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அபாரமாக ஆடிய சயந்தன் 6 பௌண்ட்ரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களை சேர்த்து இறுதி விக்கெட்டாக வீழ்ந்தார்.

56.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த மத்திய கல்லூரி 157 ஓட்டங்களைப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரியின் பந்துவீச்சில் கவிசன் 5 விக்கெட்களையும் மாதுளன் 3 விக்கெட்களையும் ராண்ட்யோ, கிந்துசன் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது சென். ஜோன்ஸ் அணி.

தொடக்க வீரர்கள் அபாரமாக ஆடினர். அபிஜோய்சந்த் 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் நிதானம் காட்டி ஆடிய சச்சினுடன் இணைந்த கிந்துசன் அபாரமாக ஆடினார். அவர் 59 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்தார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்தபோது சென். ஜோன்ஸ் கல்லூரி 30.5 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. 36 ஓட்டங்களுடன் சச்சின் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்களையும் திசான் கைப்பற்றியிருந்தார்.

இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும். (ஐ)

## ஆசிரியர்...

- நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டன. 2 ஆயிரத்து 500 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டது. மீதமானவர்களுக்கு எப்போது நியமனம் வழங்கப்படும் என்று ஜயந்த சமரவீர எம். பி. கலவி அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆசிரியர் நியமனம் தொடர்பாக அனைத்து மாகாணங்களின் ஆளுநர்களுடனும் தொலைபேசி மூலமாகக் கலந்துரையாடினேன். அத்துடன், இன்று (நேற்று) அனைத்து மாகாணங்களிலும் உள்ள கல்வித்துறை உயர் அதிகாரிகளுடன் சூம் செயலி மூலம் பேச்சு நடத்தப்பட்டது.

விரைவாக மேற்கொள்ள வேண்டிய ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஐ)

## வெடுக்குநாறி...

தொன்மை மிகுந்த கோயிலான வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பௌத்த தொல்லியல்கள் காணப்படுகின்றன என்று கூறி அந்த இடத்தில் விகாரை அமைக்க தொல் பொருள் திணைக்களமும் பௌத்த பிக்குகளும் செயல்படுகின்றனர். இது தொடர்பான வழக்கு வவுனியா நீதி மன்றில் நிலுவையில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பள...

வரக்கூடிய அநாவசியமான செலவாக்கை தவிர்ப்பதற்கு சம்பள அதிகரிப்பை தீர்மானிப்பதில் மத்திய வங்கிக்கு சுயாதீனம் இருக்கவேண்டியது முக்கியமானதாகும். சம்பள அதிகரிப்புகள் நெறிமுறைக்கு புறம்பானவையாக இருந்தால் அதைப் பற்றி பேசலாம். ஆனால், சட்டத்தை மாற்றுவதன் மூலம் மத்திய வங்கியை எதிர்ப்பதற்கு அல்லது அதன் சுதந்திரத்தை பறிக்க முயற்சிப்பது ஆபத்தானது.

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளங்கள் மீளாய்வு செயயப்படுவது இதுதான் முதற்தடவை அல்ல. மீளாய்வை மத்திய வங்கி இப்போது தான் முதல் தடவையாக பகிரங்கப் படுத்தியிருக்கிறது. நாம் ஒளிவுமறை வின்றி செயல்படுகிறோம். சம்பள அதிகரிப்பு பற்றி வெளியில் கூறுகின் றோம் - ஏன் இதைச் செய்தோம் என்று பாராளுமன்றத்துக்கு கூறுகிறோம் - நாம் பொறுப்புக் கூறுபவர்களாக இருக்கிறோம்.

மத்திய வங்கி அதன் சுயாதீனத்தை - சுதந்திரத்தை இழப்பதன் விளைவாக இன்னொரு நெருக்கடி உருவாகும். 2019 ஆம் ஆண்டு சம்பவத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மத்திய வங்கியின் சுதந்திரத்தை கட்டுப்படுத்த புதிய சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அப்போது முயற்சி எடுக்கப்பட்டது. அதிகாரத்துக்கு வந்த புதிய அரசாங்கம் மத்திய வங்கிக்கு சுயாதீனம் தேவையில்லை என்று ஒரு கொள்கைத் தீர்மானத்தை எடுத்தது.

இதன் விளைவை அடுத்த இரண்டு வருடங்களில் கண்டோம். மத்திய வங்கி சுயாதீனமாக இருந்ததாலேயே எம்மால் உறுதிப்பாட்டை மீண்டும் கொண்டுவரக்கூடியதாக இருந்தது. ஆனால், மத்திய வங்கியின் சுயாதீனத்தின் பெறுமதியை இப்போது மறந்து அதை மலினப்படுத்த முயற்சி செய்கிறார்கள் - என்றார்.

இதேநேரம், மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தமைக்காக மத்திய வங்கியை அரசாங்கம் - எதிர்க்கட்சிகள் கடுமையாகக் கண்டித்தன. இந்த அதிகரிப்பு சட்டமீறல் என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். அத்துடன், இந்த சம்பள அதிகரிப்புக்காக மாதாந்தம் 23 கோடி 20 இலட்சம் ரூபா மேலதிகமாகத் தேவை என்று பாராளுமன்ற கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

# ஓய்வு பெற்றார் யாழ். அரச அதிபர்!



யாழ்ப்பாணம், மார்ச் 08

யாழ். மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலராக பணியாற்றிய அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நேற்றுடன் ஓய்வு பெற்றார். அவருக்கு, யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரியாவிடை நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்தின் முன்றலில் இருந்து தமிழரி பாரம்பரிய தமிழ் கலை வடிவங்களுடன் வரவேற்கப்பட்டார். இதைத் தொடர்ந்து, கடமையை உத்தியோகபூர்வமாக மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனுக்கு வழங்கும் நிகழ்வு நடந்தது.

இதைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரியாவிடை நிகழ்வுகள் நடந்தன. இதன் போது யாழ். மாவட்ட செயலரின் நினைவுகளை தாங்கிய “அருமருந்தென்ன “என்ற தலைப்பிலான இறுவட்டு மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் வெளியிடப்பட்டது.

யாழ். மாவட்ட செயலராக கடந்த 2023 ஜனவரியில், தனது கடமைகளை பொறுப்பேற்ற மாவட்ட செயலர் 1992 டிசெம்பரில் அரச சேவையில் இணைந்து கொண்டார். 1995 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரியாவிடை நிகழ்வில், யாழ். மாவட்ட செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், அவரது குடும்பத்தினர், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி பிரதேச செயலர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, மார்ச் 08

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு நேற்று தாக்கல் செய்யப்பட்டது.

கட்சியின் ஊழல் எதிர்ப்புக் குழு உறுப்பினர்களான நிரோஷன் பாதுக்க மற்றும் ஆனந்த பாலித ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்தனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சபாநாயகர் தலைமையிலான அரசமைப்பு பேரவை மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அரசமைப்பு பேரவை உத்தியோகபூர்வமாக அங்கீகாரம் வழங்கவில்லை என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

## இரு...

ஆயிரத்து 232 சிறுவர் பாலியல் வன்புணர்வுகள் பதிவா கின. 2023இல் இது ஆயிரத்து 497 சிறுவர் பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில், கடந்த செப்ரெம்பர் 168 சிறுமிகள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகினர். இதில், 16 வயதுக்குட்பட்ட 110 முதல் 112 வரையிலான சிறுமிகள் கருத்தரித்தனர்.

நீதிமன்றில் பதிவாகியுள்ள வழக்குகள் அடிப்படையில் 10 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகளே அதிகளவில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகியுள்ளனர்.

சிறுவர் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு சிறை தண்டனை விதிக்கப்பட்ட சிலர் அவர்களின் தண்டனைக் காலம் முடிவடைந்து வந்த பின்னரும் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, இவ்வாறான நபர்கள் தொடர்பில் சிறுமிகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இவ்வாறான சிறார் வன்புணர்வுகளை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றும் கூறினார். (ஐ)

## கோப்...

பெயரும் காமினி வலேபொடவின் பெயரும் முன்மொழியப்பட்டன.

குழுவின் செயல்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்ல அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக புதிய தலைவர் தெரிவித்தார்.

இதேபோன்று, கோபா எனப்படும் பாராளுமன்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் புதிய தலைவராக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றபோதே புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டார்.

லசந்த அழகியவண்ணவின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன முன்மொழிந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் வழிமொழிந்தார்.

இதன்போது, குழுவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் புதிய தலைவர் வருகை தந்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார். குழுவின் எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக்குவதற்கு அனைத்து உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசுக்கு ஒத்துழைக்கவேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் சபையில் கோரிக்கை



கொழும்பு, மார்ச் 08

''தமிழ் மக்களின் பிரச்னைக்கான தீர்வினை வழங்கும் அரசாங்கத்தின் செயற்பாட்டுக்கு ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்க தமிழ்மக்கள் பிரதிநிதிகளும் முன்வரவேண்டும்'' என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் ஒட்டுமொத்த புலம்பெயர் அமைப்பினருக்கும் எதிரானவன் கிடையாது. நீங்கள் இங்கு தினமும் தனி இராச்சியம் பற்றித்தானே பேசுகின்றீர்கள்.

சமஷ்டி தொடர்பாக பேசுவதில் பிரச்னையில்லை. அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகத்தான் நாமும் பேசிக் கொண்டிருக்கிறோம். வடக்கு- கிழக்கு மக்கள், இந்த நாட்டின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் இல்லை என்று கூறுகின்றார்கள். 1983 ஆம் ஆண்டில் எனது தந்தையின் தமிழ் நண்பர்களும்தான் கொல்லப்பட்டார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலகம் செய்த விசாரணையில், 6 இலட்சத்து 50 பேர் தாங்கள் நேசித்தவர்களை இழந்துள்ளார்கள் என தெரியவந்துள்ளது.

வடக்கில் மட்டும் 5 இலட்சத்துக்கும் அதிகமானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஒரு நிவாரணம் வேண்டும் என்பதுதான் எமதும் கோரிக்கையாகும். இது உண்மையான தீர்வாக அமையாவிட்டாலும், நாம் இதனை ஆரம்பிக்க வேண்டும்.

இந்த எண்ணக்கருவை எம்மால் கைவிட முடியாது. இதுதான் என்னுடைய நிலைப்பாடு.

இதற்கான ஆலோசனைகளை வழங்க தமிழ் பிரதிநிதிகள் முன்வர வேண்டும் - என்றார். (அ)

# அலி சப்ரி ரஹீமை கட்சியிலிருந்து நீக்குவதற்கு இடைக்காலத் தடை!

கொழும்பு, மார்ச் 08

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி சந்துன் விதானவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 23ஆம் திகதி துபாயில் இருந்து இலங்கை திரும்பிய போது, சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட தங்கத்துடன் அலி ஷப்ரி ரஹீம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவத்தை அடிப்படையாக வைத்து தனது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்யவும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தம்மை நீக்குவதை தடுக்கவும் இடைக்கால தடை விதிக்க வேண்டும் என அவர் மனு தாக்கல் செய்திருந்தார்.

மனுவை பரிசீலித்த கொழும்பு பிரதம மாவட்ட நீதிபதி, மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்து உத்தரவிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில்!

கொழும்பு, மார்ச் 08

"தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கமைய இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சமன்ஸ்ரீ ரத்நாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கமைய இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கான பணிகளை ஆரம்பித்துள்ளது. நாட்டின் சட்டத்திற்கு அமைய செயற்படுவதாக இருந்தால் நிச்சய மாக தேர்தலை நடத்த வேண்டும். அதேபோல் எந்தவொரு நேரத்தி லும் பொதுத்தேர்தலை நடத்துவ தற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது - என்றார். (அ)

# களுவன்கேணி பாடசாலை வீதி மக்கள் பாவனைக்கு கையளிப்பு



மட்டக்களப்பு, மார்ச் 08

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யும் அத்தியாவசியமான வீதி கள் இனம் கண்டு அவற்றை செப்பனிட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவில் 1.3 கி.மீ. நீளமான களுவன்கேணி பாட சாலை வீதி காபெட் வீதியாகவும், 160 மீற்றர் நீளமான வந்தாறுமூலை உள்ளக வீதி கொங்கிரீட் வீதியாகவும் செப்பனிட்டு மக்கள் பாவனைக்காக இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தன் அவர்களினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் களுவன் கேணி ஸ்ரீமுருகன் ஆலய பிரதமகுரு நிமல்ராஜ் சர்மா, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி ஏ. லிங்கேஸ்வரன், களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலய அதிபர் விராத்தனன், கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் இணைப்புச் செயலாளர் ஆ. தேவராஜ், மாவட்ட ஒருங்கி ணைப்பு குழு அலுவலக உத்தியோ கத்தர் திருநாவுக்கரசு, ஏறாவூர் பற்று முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கோணேஸ்வரன். கிராம மட்ட பிரதிநிதிகள் உட்பட வீதி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# சுழிபுரம் புத்தர் சிலைக்கு எதிராக இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 08

சுழிபுரம் - சவுக்கடியில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்-

சுழிபுரத்தில் கடற்படையினரால் சவுக்கடிப் பிள்ளையார் கோயிலடியில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை அகற்றக்கோரி இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு எதிர்ப்புப் போராட்டம் சவுக்கடிப் பிள்ளையார் கோயில் முன்பாக நடைபெறவுள்ளது.

எனவே அனைவரும் திரண்டு பேராதரவு தருமாறு அன்புரிமையோடு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

# யாழ். வந்தார் சவேந்திர சில்வா



யாழ்ப்பாணம், மார்ச் 08

பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு உயர் மட்ட குழுவினர் யாழ்.மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்தனர்.

இலங்கை விமானப்படையின் 73ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் நிலையில் குறித்த நிகழ்விலும் அவர்கள் பங்கேற்றனர்.

இதன்போது யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி, விமானப்படையினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

"நட்பின் சிறகுகள்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய குறித்த கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதிவரை காலை 10 மணி முதல் இரவு 11 மணிரை நடைபெறவுள்ளது. (அ)

# தியத்தலாவையில் ஐஸ் கட்டி மழை!

கொழும்பு, மார்ச் 07

பதுளை மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு ஐஸ் மழை பெய்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் கடந்த சில மாதங்களாக கடும் வறட்சியுடனான காலநிலை நிலவி வந்த நிலையில் நேற்றையதினம் மாலை பலாங்கொடை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளதுடன் இந்த மழையுடன் ஐஸ் கட்டிகளும் தரையில் விழுந்ததாக பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.

பலாங்கொட கிரிமதித்தன்ன, யஹலவெல, பரியதன்ன, ஹபுகஹகுபுர, கஹடபிட்டிய, பல்லபனதென்ன, கெகில்ல, பதுகாமிமன போன்ற பிரதேசங்களில் இந்த மழை பெய்துள்ளது.

இந்த மழை இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து பெய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மழையினால் அந்த பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு பின்னர் அது சீரமைக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# இலங்கை அணியை வென்றது பங்களாதேஷ்

சிலெட், மார்ச் 08

இலங்கை அணியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது பங்களாதேஷ் அணி.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் அணி மூன்று இருபது -20 ஓவர், 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்டில் விளையாடுகிறது. அதில் இந்த இரு அணிகளுக்கு இடையே முதலில் இருபது -20 தொடர் நடைபெறுகிறது.

இதில், நடைபெற்ற முதலாவது இருபது - 20 போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது. இதனையடுத்து இந்த இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது இருபது -20 போட்டி நேற்று நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 165 ஓட்டங்கள் அடித்தது. அந்த அணியில் அதிகபட்சமாக கமிந்து மெண்டிஸ் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

இதனையடுத்து 166 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் இலங்கை பந்துவீச்சை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களை குவித்தது. வெறும் 18.1 ஓவர்களிலேயே 2 விக்கெட்களை மட்டுமே இழந்த பங்களாதேஷ் 170 ஓட்டங்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ் அணி தரப்பில் அதிகபட்சமாக அதிரடியாக விளையாடிய நஜ்முல் ஹொசைன் சாண்டோ 53 ஓட்டங்கள் அடித்தார். இலங்கை தரப்பில் பத்திரண 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

இந்த போட்டியின் முடிவில் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ளது. இதனையடுத்து 3ஆவது மற்றும் கடைசி இருபது -20 போட்டி நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# குல்தீப் யாதவ் புதிய சாதனை



தர்மசாலா, மார்ச் 08

குறைந்த பந்துகளில் 50 விக்கெட்களை வீழ்த்திய இந்திய வீரர் என்ற சாதனையை குல்தீப் யாதவ் படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்று தர்மசாலாவில் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. சிறப்பாக பந்து வீசிய குல்தீப் 5 விக்கெட்களை வீழ்த்தியது மட்டுமல்லாமல் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார்.

அந்த வகையில் டெஸ்ட் போட்டிகளில் குறைந்த பந்துகளில் 50 விக்கெட்களை கைப்பற்றிய இந்திய வீரர் என்ற சாதனையை குல்தீப் படைத்துள்ளார். இதற்கு முன்னர் அக்ஷர் பட்டேல் 2,205 பந்துகளில் 50 விக்கெட்களையும் பும்ரா 2,530 பந்துகளில் 50 விக்கெட்களையும் வீழ்த்தினர். இதனை குல்தீப் யாதவ் முறியடித்துள்ளார். வெறும் 1,871 பந்துகள் வீசி இந்த சாதனையை குல்தீப் படைத்துள்ளார். (ஐ)

# அஸ்வின் சுழல் ஜாலத்தில் சுருண்டது இங்கிலாந்து!

தர்மசாலா, மார்ச் 08



இந்தியாவுக்கு எதிரான 5ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் குல்தீப் யாதவ் மற்றும் அஸ்வினின் சுழல் ஜாலத்தில் சிக்கிய இங்கிலாந்து அணி 218 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்துள்ளது.

தர்மசாலாவில் நடைபெற்று வரும் 5ஆவது டெஸ்ட்டில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது. இதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு பென் டக்கெட் மற்றும் ஜாக் கிராவ்லி சுமாரான தொடக்கம் கொடுத்தனர். பாஸ்பால் ஆட்டத்தை மறந்து பொறுமையை கடைப்பிடித்த இவர்களின் கூட்டணி 18ஆவது ஓவர் வரை நீடித்து 64 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பென் டக்கெட்டை விக்கெட்டை முதல் விக்கெட்டாக வீழ்த்தினார் குல்தீப் யாதவ்.

பென் டக்கெட் 58 பந்துகளில் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். அதே குல்தீப் ஒல்லி போப்பை நிலைக்க விடவில்லை. அவரை 11 ஓட்டங்களில் விக்கெட் ஆக்கிய குல்தீப், மூன்றாவது விக்கெட்டாக நிதானத்துடன் ஆடி அரைச்சதம் கடந்திருந்த ஜாக் கிராவ்லியை 79 ஓட்டங்களில் வீழ்த்தினார்.

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியை அதிரடியுடன் தொடங்கிய ஜொன்னி பெயர்ஸ்ரோவை அதே அதிரடியில் வீழ்த்தி இந்த இன்னிங்ஸின் முதல் நான்கு விக்கெட்களையும் தன் வசமாக்கினார் குல்தீப் யாதவ். அதுவரை இந்தியாவின் மற்ற பந்துவீச்சாளர்கள் விக்கெட் வீழ்த்தவில்லை.

இங்கிலாந்து அணி 175 ஓட்டங்கள் எடுத்திருந்த சமயத்தில் ஜோ ரூட் நிலைத்து ஆட முயன்றார். ஆனால், அவரை எல். பி. டபிள்யூ. மூலம் ஆட்டமிழக்க செய்தார் ஜடேஜா. இதற்கு அடுத்த ஓவரிலேயே இங்கிலாந்து அணித்தலைவர் பென் ஸ்ரோக்ஸை ஓட்டமற்று நடையைக்கட்ட வைத்தார் குல்தீப். இது குல்தீப்பின் ஐந்தாவது விக்கெட். அதேநேரம் டெஸ்ட் கிரிக்கெட்டில் குல்தீப் யாதவின் 50வது விக்கெட் என்ற மைல்கல்லாகவும் அமைந்தது.

இதன்பின் அஸ்வின் தனது மாயாஜாலத்தை காண்பிக்க ஆரம்பித்தார். தனது 100ஆவது டெஸ்டில் பந்துவீசிய அஸ்வினுக்கு முதல் இரண்டு பகுதிகள் சிறப்பாக அமையவில்லை. ரொம் ஹார்ட்லி, பென் ஃபோக்ஸ், அண்டர்சன் மற்றும் மார்க் வூட் ஆகியோரை அடுத்தடுத்து ஆட்டமிழக்க செய்து 100ஆவது டெஸ்டில் 4 விக்கெட் வீழ்த்தி முத்திரை பதித்தார்.

இதன்மூலம் முதல் இன்னிங்ஸில் 57.4 ஓவர்களுக்கு இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 218 ஓட்டங்கள் எடுத்தது. தற்போது இந்திய அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியுள்ளது. (ஐ)

# 100ஆவது டெஸ்டில் களமிறங்கிய அஸ்வினுக்கு கௌரவமளிப்பு!

தர்மசாலா, மார்ச் 08



இந்தியா - இங்கிலாந்து இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி தர்மசாலாவில் நேற்று தொடங்கியது. இந்தப் போட்டி இந்திய வீரர் அஸ்வினின் 100ஆவது போட்டியாக அமைந்தது.

இந்திய அணி சார்பாக 100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் 14ஆவது வீரர் என்ற பெருமையை ரவிச்சந்திரன் அஸ்வின் பெற்றுள்ளார்.

இந்நிலையில் இந்த போட்டியின்போது இந்திய அணி சார்பாக தனது நூறாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு அவர்களது குடும்பத்தினர் முன்னிலையில் பி.சி.சி.ஐ. சார்பாக மரியாதை அளிக்கப்பட்டது. அவருக்கு நூறாவது டெஸ்ட் தொப்பியை இந்திய அணியின் பயிற்றுநர் ராகுல் டிராவிட் வழங்கினார். இதன்போது, அஸ்வினின் மனைவி பிரீத்தி மற்றும் அவரது இரண்டு மகள்களும் உடனிருந்தனர்.

அந்த பரிசளிப்பு விழாவுக்கு பிறகு தனது குடும்பத்தாருடன் புகைப்படம் எடுத்துக் கொண்ட அஸ்வின் மைதானத்துக்கு களமிறங்கும்போது இந்திய அணி வீரர்கள் இருபுறமும் அரணமைத்து அஸ்வினை வரவேற்று மரியாதை செய்தனர்.

அஸ்வின் முதல் ஆளாக மைதானத்துக்கு செல்ல பின்னால் இந்திய வீரர்கள் சென்றனர். இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா அஸ்வினுக்கு வழங்கிய இந்த மரியாதை பலரின் மத்தியிலும் பாராட்டுகளை பெற்றது.

(ஐ)

# இந்தியன் வெல்ஸ் ஓப்பன்; ரபேல் நடால் விலகினார்!



கலிபோர்னியா, மார்ச் 08

ஸ்பெயினின் சேர்ந்த ரென்னிஸ் நட்சத்திர வீரர் ரபேல் நடால் காயம் காரணமாக இந்த ஆண்டு நடைபெறவுள்ள இந்தியன் வெல்ஸ் ஓப்பன் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

ஏறக்குறைய ஓர் ஆண்டுக்கு பின்னர் இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற பிரிஸ்பேன் ரென்னிஸ் தொடரில் நடால் பங்கேற்றார். ஆனால், அந்த தொடரின்போது ஏற்பட்ட காயம் காரணமாக அவுஸ்திரேலிய ஓப்பனில் இருந்து விலகினார். அந்தக் காயம் இன்னும் முழுமையாக குணமடையாததால் அவர் இந்தியன் வெல்ஸ் ஓப்பனில் இருந்தும் விலகியுள்ளார்.

நடால் விலகியதன் காரணமாக இந்திய வீரர் ஸ்மித் நாகல் அந்த தொடரில் பங்கேற்க வாய்ப்பு கிடைத்துள்ளது. (ஐ)

# ஹைய்த்தி: ஒரு முன்னாள் காவல்துறை அதிகாரி, நாட்டை கலங்கடிக்கும் தாதாவாக மாறிய கதை!



ஹைய்த்தி (Haiti) நாட்டில் முன்னாள் காவல்துறை அதிகாரி ஒருவர் நாட்டையே கலங்க வைக்கும் தாதாவாக மாறி அச்சுறுத்தி வருகிறார். அவரது பெயர் ஜிம்மி செரிசியர்.

ஹைய்த்தியில் தொடரும் வன்முறையின் காரணமாக அந்நாட்டு அரசாங்கம் அவசர நிலையை பிரகடனப்படுத்தியது. நாட்டின் ஒரு பகுதியைக் கட்டுப்படுத்தும் ஆயுதக் குழுக்களின் தலைவர்கள், ஹைய்த்தி பிரதம மந்திரி ஏரியல் ஹென்றி ராஜினாமா செய்ய வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

அந்தத் தலைவர்களில் ஒருவர்தான் ஜிம்மி செரிசியர். இவர் “பார்பெக்யூ” என்றும் அழைக்கப்படுகிறார். ஹைய்த்தியின் வன்முறை நிகழ்வுகளுக்கு முக்கிய காரணமாக இருக்கும் ஜி-9 அண்ட் ஃபேமிலி (G-9 and Family) என்ற மிகவும் சக்திவாய்ந்த ஆயுதக் குழுவின் தலைவர் இவர்.

சனிக்கிழமையன்று நாட்டின் பிரதான சிறைக்குள் நுழைந்த ஆயுதக் குழுக்கள், 3,700க்கும் மேற்பட்ட கைதிகளை விடுவித்த பின்னர் இந்த வன்முறை புதிய நிலைகளை எட்டியது. அந்தத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் பலர் காயமடைந்தனர்.

பிரதான சிறைச்சாலை மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல் ஹைய்த்தி நாட்டில் 2020ஆம் ஆண்டு முதல் நிலவும் மோசமான அரசியல் சூழ்நிலைக்கு மற்றொரு சாட்சியாகும்.

நாட்டை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஆயுதக் குழுக்கள் முன்னெடுத்த போர், நாட்டில் வன்முறை பரவ அடிப்படையாக செயல்பட்டது. இதனால் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஹைய்த்தியில் இப்போது பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது.

### தலைநகரை ஆளும் ஆயுதக்குழுக்கள்

ஜூலை 7, 2021 அன்று அதிபர் ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டது மிகவும் தீவிரமான தருணங்களில் ஒன்றாகும். இது அரசு நிர்வாகத்தில் ஒரு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது, அது இன்றுவரை தீர்க்கப்படாமல் உள்ளது.

தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸின் 80 வீத நிலப்பரப்பை இந்த ஆயுதக் குழுக்கள் கட்டுப்படுத்துகின்றன. வெவ்வேறு செய்தி அறிக்கைகளின்படி, சிறைச்சாலை மீதான இவர்களின் சமீபத்திய தாக்குதலின் நோக்கம், அதிபர் மொய்ஸின் மரணத்திற்குப் பிறகு அதிகாரத்திற்கு வந்த பிரதமர் ஹென்றி பதவி விலக வேண்டும் என்பதாகும்.

தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் ஹென்றி வாக்குறுதி அளித்திருந்த நிலையில், இன்றுவரை நடத்தப்படாததால் இந்த கோரிக்கை எழுந்துள்ளது.

“ஹைய்த்தி தேசிய காவல்துறை மற்றும் ராணுவம் தங்கள் பொறுப்பை ஏற்று பிரதமர் ஏரியல் ஹென்றியை



கைது செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மீண்டும் சொல்கிறோம், மக்கள் எங்கள் எதிரி அல்ல. ஆயுதக் குழுக்களின் நோக்கம் மக்களுக்கு எதிராக செயல்படுவது அல்ல” என்று சமூக வலைத்தளங்களில் வெளியான ஒரு செய்தியில் செரிசியர் கூறினார்.

ஆயுதக் குழு தலைவரான செரிசியர் கடந்த காலத்தில் ஹென்றியின் அரசாங்கத்திடம் பொது மன்னிப்பு கோரியிருந்தார். தனது குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் சிறையிலிருந்து விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்திருந்தார்.



முன்னாள் போலீஸ் அதிகாரியான செரிசியர், சமீபத்திய ஆண்டுகளில் ஹைய்த்தியை உலுக்கி வரும் ஒரு முன்னணி ஆயுதக் குழுவின் தலைவராக மாறியுள்ளார். நாட்டின் வன்முறை அலைக்கு பின்னால் ஒரு முக்கிய புள்ளியாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் கூற்றுப்படி, ஹைய்த்தியில் நடக்கும் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு இவரே பொறுப்பு. இந்த காரணத்திற்காக, அமெரிக்காவும் ஐ.நாவும் இவர் மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளன.

அதிபர் மொய்ஸின் மரணத்திற்குப் பிறகு, நாட்டின் “ஊழல்” அரசியல்வாதிகளுக்கு எதிரான புரட்சியை ஊக்குவிப்பதில் செரிசியர் ஒரு முக்கிய பங்கை வகித்துள்



ளார். அவரது விருப்பமான வழிகளில் ஒன்று சமூக வலைதளங்கள். தனது குழுவின் செய்தியை உலகுக்கு அறிவிக்க மட்டுமல்லாமல், அவரது ஆயுத குழுவுக்கு புதிய உறுப்பினர்களை ஈர்க்கவும் அது உதவுகின்றது.

### காவல்துறை அதிகாரி முதல் தாதா வரை

“பார்பெக்யூ” என்ற அவரது புனைப்பெயருக்கான காரணம் என்ன என்பதே முதல் கேள்வியாக இருக்கும். அவரது அம்மா தெருவில் கோழி விற்றதே இதற்கு காரணம் என்று அவர் பேட்டிகளில் கூறியுள்ளார்.

ஆனால் ஹைய்த்தி வன்முறைகளை நேரில் கண்ட சில சாட்சிகளின் கூற்றுப்படி, அவர் பொதுவாக பாதிக்கப்பட்டவர்களின் வீடுகள் மற்றும் உடல்களை எரிப்பதால் தான் இந்த புனைப்பெயர் வந்துள்ளது.

ஒரு போலீஸ் அதிகாரியாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய செரிசியர் இன்று ஜி-9 அண்ட் ஃபேமிலி என்ற குழுவின் தலைவராக உள்ளார். உலகின் அதிக வன்முறைகள் நிகழும் நாடுகளில் ஒன்றாக கருதப்படும் ஹைய்த்தியின் மிகவும் ஆபத்தான ஆயுதக் குழுக்களின் கூட்டணி தான் இந்த ஜி-9 அண்ட் ஃபேமிலி.

2021ஆம் ஆண்டில் 17 அமெரிக்க மற்றும் கனேடிய மிஷனரிகளைக் கொண்ட குழுவைக் கடத்தியது உட்பட பல்வேறு குற்றச் செயல்களில் இந்த குழு ஈடுபட்டுள்ளது. 400 மாவோஸோ போன்ற சக்திவாய்ந்த குற்றவியல் அமைப்புகளுடன் இணைந்து செரிசியர் இதைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

ஏறக்குறைய 47 ஆண்டுகளுக்கு முன்பு ஹைய்த்தியின் தலைநகரில் பிறந்தார் செரிசியர். அவருக்கு எதிராக அமெரிக்கா விதித்த தடைகளோ அல்லது அவரது நாட்டில் உள்ள எந்த அதிகார அமைப்போ அவரது நடவடிக்கைகளை இன்றுவரை கட்டுப்படுத்த முடியவில்லை.

செரிசியரின் குற்றவியல் வாழ்க்கை, அவர் ஒரு போலீஸ் அதிகாரியாக இருந்தபோது தொடங்கியது. நவம்பர் 2017இல், போர்ட்-ஓ-பிரின்ஸ் நகருக்கு அருகில் இருந்த கிராண்ட் ரவைன் பகுதியில் மாஃபியாக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அதிகாரப்பூர்வ நடவடிக்கையில் பொதுமக்கள் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். இதில் செரிசியரின் பங்கு இருந்ததாக கூறப்பட்டது.

அந்த தருணத்திலிருந்து, நாட்டில் செயல்படும் ஆயுதக் குழுக்களுடனான அவரது உறவும் தொடங்கியது. தொடக்கத்தில் டெல்மாஸ் 6 என்ற குழுவின் முக்கிய செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரானார்.




உள்ளூர் மற்றும் சர்வதேச அறிக்கைகளின்படி, செரிசியர் அந்த கும்பலிடமிருந்து அதிகாரத்தைப் பெற முடிந்தது. காவல்துறை செல்வாக்கு மற்றும் மொய்ஸின் அரசாங்கத்தின் உதவிகளும் அதற்கு காரணம்.

ஒரு போலீஸ் அதிகாரியாக அவர் சில அட்டூழியங்களைச் செய்ததாகக் கூறப்படுகிறது, அதற்காக அவர் மீது சர்வதேச அமைப்புகள் சில தடைகளை விதித்தன.

போர்ட்-ஓ-பிரின்ஸ் அருகே நடந்த லா சலின் படுகொலையில் ஈடுபட்ட அதிகாரிகளில் இவரும் ஒருவர் என்று ஐ.நாவும் அமெரிக்காவும் சுட்டிக்காட்டியுள்ளன. அரசுக்கு எதிராக லா சலின் மக்கள் நடத்திய போராட்டத்தில், போலீஸ் மற்றும் குற்றவியல் குழுக்களின் ஒருங்கிணைந்த தாக்குதலால் பலர் கொல்லப்பட்டனர். உள்ளூர் மக்களின் போராட்டத்தை அடக்கவே இந்த படுகொலை நிகழ்த்தப்பட்டது என அமெரிக்கா கூறியது.

அப்போது குறைந்தது 71 பேர் இறந்தனர். ஆனால் செரிசியர் எப்போதும் போல அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்தார்.

### ‘ஜி-9 அண்ட் ஃபேமிலி’ உருவானது எப்படி?

‘நான் ஒரு கேங்க்ஸ்டர் அல்ல, நான் ஒருபோதும் அப்படி நடந்து கொள்ள மாட்டேன்,” என்று அவர் செய்தி நிறுவனமான அல்-ஜசீராவிடம் 2021இல் ஒரு நேர்காணலில் கூறினார்.

“இது நான் எதிர்த்துப் போராடும் அரசு அமைப்பு செய்யும் வேலை. அந்த அமைப்பு பணத்தின் மூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்துகிறது. நான் ஒரு கேங்க்ஸ்டர் என்ற பிம்பத்தை ஏற்படுத்துகிறார்கள்” என்று அவர் கூறியிருந்தார்.

2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில், போர்ட்-ஓ-பிரின்ஸின் சில இடங்களில் நடத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதல்களில் செரிசியருக்கு பங்கு இருப்பதாக கூறப்படுகிறது.

“காவல்துறையை விட குற்றக் கும்பல்களிடம் சிறப்பான ஆயுதங்கள் உள்ளன. அதிகாரிகளின் ஆதரவும் அவர்களுக்கு உள்ளது” என்று ஹைய்த்தியின் ‘மனித உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய கூட்டமைப்பின்’ இயக்குநர் ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

ஆயுத பலம் மற்றும் அதிகார பலத்துடன், போர்ட்-ஓ-பிரின்ஸின் பிராந்தியக் கட்டுப்பாட்டிற்கான போரைத் தொடங்கினார் செரிசியர். அங்கு தொடர்ச்சியான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. அது தலைநகரில் மட்டுமல்ல, நாடு முழுவதும் பயங்கரவாதத்தை பரப்பியது.


(16ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டு அரசியல் வானம் தி.மு.க!
# மேகங்கள் கலையலாம், வானம் மறையுமா?

ராஜன் குறை

பாரதப் பிரதமர் நரேந்திர மோடி சென்ற வாரம் தமிழ்நாட்டுக்கு வந்தார். திருநெல்வேலியில் பேசும்போது அவர் பிரதமர் என்பதை மறந்து தமிழ்நாட்டின் ஆளும் கட்சியான தி.மு.க என்ற கட்சி நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் காணாமல் போய்விடும் என்று சூளுரைத்தார்.

தேர்தல் என்று வந்தால் இப்படியான சவால் பேச்சுகளெல்லாம் இயல்புதானே என்று நினைக்கலாம். தொண்டர்களை உற்சாகப்படுத்த இப்படிப் பேசுவது வழக்கம் தானே என்றும் சிலர் கூறலாம். ஆனால், ஒரு பிரதமரே இப்படிப் பேசுவதை எளிதில் புறக்கணிக்க முடியாது.



இதற்கு முன்னரே பாஜக தலைவர்கள் “கழகங்கள் இல்லா தமிழகம்” என்று பேசியுள்ளார்கள். “காங்கிரஸ் இல்லாத இந்தியா” என்று பேசியுள்ளார்கள். இந்தியில் ‘முக்த்’ என்பார்கள். முக்தி அடைந்துவிடும் அல்லது அழிந்துவிடும் என்று பொருள். “காங்கிரஸ் முக்த் பாரத்” என்பார்கள். அதாவது, எதிர்க்கட்சியின் இருப்பையே சகிக்க முடியாத தன்மையை வெளிப்படுத்துவார்கள்.

பாஜக-வை பாசிசத்தன்மை கொண்ட கட்சி என்று கூறும்போது சிலர் அதை மிகைக் கூற்றாக, தேய் வழக்காக நினைக்கிறார்கள். ஆனால், ஒரே அடையாளத்தின் மீது தேசத்தைக் கட்டமைக்க வேண்டும் அந்த அடையாளத்தை ஏற்காதவர்கள் தேசத்திற்கு அந்நியர்கள் என்ற எண்ணம் பாஜக-வின் அடிநாதமான சிந்தனை என்பதை மறந்துவிட முடியாது.

அது என்ன ஒற்றை அடையாளம்? அதுதான் “இந்து, இந்தி, இந்தியா” என்ற சூத்திரம். அதற்கு அடிப்படை ஆரிய சமஸ்கிருத கலாச்சாரம். இந்திய தேசியம் உருவானபோதுதான், மக்கள் பேசிய இந்துஸ்தானி மொழியை சமஸ்கிருதமயமாக்கி நவீன இந்தியை உருவாக்கினார்கள். ஆரியர்களின் வேதங்களே இந்தியப் பண்பாட்டின் ஒற்றை மூலவேர் என்ற சித்திரத்தைக் கட்டமைத்தார்கள். இந்த இரண்டு அடையாளங்களுமே இந்தியா என்ற தேசம் என்று கருதினார்கள்.

காந்தி, நேரு உள்ளிட்ட வடநாட்டு காங்கிரஸ் தலைவர்களும் ஆரிய பண்பாட்டினை மதித்தாலும், இந்தியாவுக்குப் பல்வேறு பண்பாட்டு மூலங்கள் உண்டு என்பதை ஏற்றார்கள். வேற்றுமையில் ஒற்றுமை என்பதை கோட்பாடாக்கினார்கள். ஒற்றை அடையாளத்தை தேசத்தின் மையமாக வைத்து பிற அடையாளங்களைப் புறமொதுக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கவில்லை. ஆனால், இந்து மகா சபை சாவர்க்கரும், ஆர்.எஸ்.எஸ் கோல்வால்கரும் அப்படி ஆரிய, சமஸ்கிருத, இந்தி, இந்து, இந்தியாவையே தேசத்தின் ஒற்றை பண்பாட்டு மூலமாக நினைத்தார்கள்.

அந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் வளர்ந்த பிரதமர் மோடி, தி.மு.க காணாமல் போகும் என்று சொல்வதை வெறும் தேர்தல் நேர பேச்சாகக் கருத முடியாது. திராவிடம் என்ற மாற்றுப் பண்பாட்டை இந்தியாவில் இருக்க சகிக்காத ஒற்றை அடையாள சித்தாந்தத்தின் குரலாகத்தான் அதைப் பார்க்க முடியும்.

### தி.மு.க என்னும் திராவிட அரசியல் வானம்


ஆரிய ஒற்றை பண்பாட்டு அடையாளத்தினை மறுத்து தென்னிந்தியாவில் உருவானதுதான் திராவிட சித்தாந்தம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தே திராவிட தமிழ் அடையாளத்தின் புத்தெழுச்சி தொடங்கியது. இராமலிங்க அடிகள், மனோன்மணீயம் சுந்தரனார், பண்டித அயோத்திதாசர் என வரிசையாகப் பல பெரியோர்கள் ஆரிய பிராமண பண்பாட்டு கூறுகளை விலக்கி திராவிட தமிழ் அடையாளத்தை மீட்டுருவாக்கம் செய்பவர்களாக உருவானார்கள்.

பார்ப்பனர்களின் சமூக, அரசியல் மேலாதிக்கத்தை எதிர்கொள்ளும் நவீன அரசியல் அமைப்பாக, குடிமைச் சமூக அமைப்பாக நீதிக்கட்சி உருவானது. அகில இந்தியாவிலும் ஒரு மாற்றுக் குரலாக விளங்கிய அது, 1920ஆம் மெட்ராஸ் பிரெசிடென்சியில் இரட்டையாட்சி முறையில் ஆட்சிக்கு வந்தது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற இட ஒதுக்கீட்டு முறைக்கு கால்கோள் இட்டது.

காங்கிரஸில் அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய பகுத்தறிவுப் பகலவன் பெரியார், காங்கிரஸ் வகுப்புவாரி ஒதுக்கீட்டுக்கு ஆதரவு அளிக்காததால் வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார். சூறாவளியாக தமிழ் மக்களிடையே ஊடுருவி ஆரிய ஜாதீய பண்பாட்டினை தகர்த்தெறியும் முனைப்பினை உருவாக்கினார்.

இந்தி மொழியை தமிழர்கள் மேல் திணிக்கும் முயற்சியை காலனீய கால காங்கிரஸ் சர்க்கார் 1937ஆம் ஆண்டு மேற்கொண்டபோது பெரும் கிளர்ச்சியை தொடங்கினார். அது திராவிட நாடு கோரிக்கையாக வடிவம் கொண்டது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில்தான் இந்திய குடியரசு உருவானபோதே திராவிட முன்னேற்றக் கழகமும் உதயமானது. சுதந்திர இந்திய குடியரசு, வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்ற மக்களாட்சித் தேர்தல் நடைமுறையை நோக்கிச் சென்றது. அதை எதிர்கொள்ள தி.மு.க மக்களிடையே வலுவான ஓர் அமைப்பினை உருவாக்க முனைந்தது. ஒவ்வோர் ஊரிலும் கிளைகளை அமைத்தது, மன்றங்களை அமைத்தது. எளிய, சாமானிய மக்களுக்கு அரசியல் பயிற்சி அளித்தது.



உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம் மிக வலுவான அடித்தளத்திலேயே அந்த செயல்பாட்டை மேற்கொண்டது.

முதலாவது, கீழடி ஆய்வுகள் சுட்டும் பன்னெடுங்காலத்து பண்பாட்டுச் செறிவு. திருக்குறளும், அகநானூறும், புறநானூறும், சிலப்பதிகாரமும், கொடுத்த மகத்தான பண்பாட்டு அடித்தளம்.

இரண்டாவது, வள்ளலார் முதல் பெரியார் வரை உருவாக்கிய சமூக புத்தாக்க நோக்கு. ஆரிய, பார்ப்பனீய பண்பாட்டு மறுப்பு. இந்தியா என்ற தேசக் கட்டமைப்பில் இருந்தாலும், திராவிட தமிழ் மக்களின் பண்பாட்டு தனித்துவத்தை வலியுறுத்தும் சுயமரியாதை, சுயாட்சி நோக்கு.

இந்த வலுவான அடித்தளங்களின் மேல் அரும்பாடுபட்டு அறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அவர் தம்பிகளும் உருவாக்கிய மகத்தான மாளிகைதான் திராவிட முன்னேற்றக் கழகம். பதினெட்டு ஆண்டுகளில் எந்த டாடா, பிர்லா, அம்பானி, அதானி ஆதரவும் இன்றி சாமானிய மக்களை அமைப்பாக்கி ஆட்சியில் அமர்ந்த மகத்தான மக்களாட்சி இயக்கம் தி.மு.க.

உண்மையில் உலகின் வேறெந்த நாட்டிலாவது இப்படி ஓர் இயக்கம் அடித்தள மக்களிடையே வேரூன்றி வளர்ந்து ஒரு மாநிலத்தின் மக்களின் அடையாளமாக, அவர்களது வரலாற்றைச் சமைக்கும் அரசியல் வானமாக விரிவுகொண்டிருக்குமா என்பது பரிசீலனைக்குரியது.

### மேகங்கள் கலையலாம், வானம் மறையுமா?

மேற்சொன்ன வரலாற்றை சரியாகச் சிந்தித்துப் பார்த்தால்தான் புரியும். ஏன் பிற அரசியல் கட்சிகளெல்லாம் தமிழ்நாட்டில் மேகங்கள் போலிருக்க தி.மு.க வானமாக இருக்கிறது என்று.

அது இந்திய குடியரசோடு உடன் தோன்றி, அடித்தள மக்களின் அமைப்பாக திராவிட தமிழ் மக்களை தன்னுணர்வு கொண்ட அரசியல் சமூகமாகக் கட்டமைத்து என்ற வரலாற்று உண்மைதான் காரணம். அது எப்படி நடந்தது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்திய ஒன்றிய அரசின் ஒற்றை ஆட்சி மொழியாக இந்தி மொழியை மாற்ற வேண்டும், ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்ற எண்ணம் வட நாட்டு தலைவர்களிடையே கோலோச்சியது. அதை எப்படியாவது திராவிட தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும் என நினைத்தார்கள்.

அரசியலமைப்பு சட்டம் எழுதப்பட்டபோது பதினைந்து ஆண்டுக்காலம் ஆங்கிலமும் ஆட்சிமொழியாகத் தொடரலாம் என்று எழுதி வைத்தார்கள். அதன்பின் ஒன்றிய ஆட்சி இந்தி மொழியில்தான் நடக்கும் என்றால் தமிழ்நாடு எப்படி அந்த ஒன்றியத்தில் பங்கெடுக்க முடியும் என்பதை வட நாட்டவர் கருதிப் பார்க்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆங்கிலம் ஒன்றிய அரசின் இரண்டாவது ஆட்சி மொழியாக, தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநிலங்களுடனான தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தொடர்ந்து போராடி வந்தது. நவீன இந்திய சிற்பி பண்டிதர் நேருவிடம் அனைத்து மாநிலங்களும் ஏற்கும் வரை ஆங்கிலம் தொடரும் என வாக்குறுதியைப் பெற்றது.

நேரு மறைந்தவுடன், அவர் கொடுத்த வாக்குறுதியும் மறையுமோ, பதினைந்து ஆண்டு கெடு 1965ஆம் முடிந்தவுடன் இந்தி ஆதிக்கம் நிலைபெறுமோ என்ற ஐயுற வேண்டிய சூழ்நிலை உருவானது. அதற்கு முக்கிய காரணம் இன்றைய பா.ஜ.க-வின் முந்தைய வடிவமான ஜனசங்கம் ஒன்றிய அரசுக்குக் கொடுத்த அழுத்தமும், நடத்திய கிளர்ச்சிகளும் என்றால் மிகையாகாது.

அந்த சூழ்நிலையில்தான் கீழப்பழுவூர் சின்னசாமி என்ற தி.மு.க தொண்டர் தன்னுடலை தீக்கிரையாக்கி இன்னுயிரை தமிழைக் காக்க ஈந்தார். “உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு” என்ற முழக்கம் பரவியது. அதற்கு அடுத்த ஆண்டு மாணவர்கள் பெரும் எழுச்சியினை தோற்றுவித்தார்கள். தமிழ்நாடு போர்க்கோலம் பூண்டது. மொழிப்போர் ஈகையர் பட்டியல் நீண்டது.

இறுதியில் ஒன்றிய அரசு பணிந்தது. அனைத்து மாநிலங்களும் ஒப்பும் வரை ஆங்கிலமும் ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாகத் தொடரும் என்பது உறுதியானது. அண்ணா தமிழ்நாட்டு பள்ளிகளில் இருமொழி கொள்கைதான் பின்பற்றப்படும் என சட்டமியற்றினார். ஆங்கிலமும், தமிழுமே பயிற்றுவிக்கப்படும், மூன்றாவது மொழி என்ற கூடுதல் சுமை ஏற்றப்படாது என்ற நிலை ஏற்பட்டது.



தொடர்ந்து இட ஒதுக்கீடு என்ற சமூக நீதிக்கொள்கைக்காகவும், மொழியுரிமை என்ற மக்கள் உரிமைக்காகவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற பண்பாட்டு மூலாதாரத்தில் முகிழ்ந்த மக்கள் நல ஆட்சியினாலும்தான் திராவிட மாடல் என்ற அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதை சாதித்துக் காட்டியது, கலைஞர் தலைமையிலான தி.மு.க ஆட்சி.

### எழுபத்தைந்தாண்டு அரசியல் காட்டுவதென்ன?

இந்தியாவிலேயே திராவிடம் என்றும், பார்ப்பனரல்லாதோர் அரசியல் என்றும் ஆரிய மாயைக்கு எதிரான அரசியலை கட்டமைத்த இயக்கத்தை அவ்வளவு எளிதாக விட்டுவிடுமா சனாதனம்?

தி.மு.க தொடங்கிய காலம் முதலே ஊடகங்கள் அதற்கு எதிராக அணிதிரண்டு நின்றன. தி.மு.க அதைத் தன்னுடைய மொழியாற்றலால் முறியடித்து தனக்கேயுரிய ஊடக வெளியினை உருவாக்கியது.

அண்ணா மறைந்து கலைஞர் முதல்வரான பிறகு நடந்த தேர்தலிலே, தி.மு.க-வை வீழ்த்த வேண்டும் என்று நெடுநாள் அரசியல் எதிரிகளான ராஜாஜியும், காமராஜரும், ஜன சங்கத்துடன் கரம் கோர்த்தார்கள். பெரியார் ராமர் முதலிய தெய்வங்களை அவமதித்தார் என்று பிரச்சாரம் செய்தார்கள். ஊழல் குற்றச்சாட்டுகளென ஊதிப் பெருக்கினார்கள்.

அந்தத் தேர்தலிலே சோஷலிஸப் பாதையைத் தேர்ந்தெடுத்த இந்திரா காந்தி அவர்களுடன் இணைந்து போட்டியிட்ட தி.மு.க மகத்தான வெற்றியை ஈட்டியது. அதைக் கண்டு வெருண்டவர்கள் தி.மு.க-வைப் பிளக்க வகை செய்தார்கள்.

ஆனால், எம்.ஜி.ஆர் உருவாக்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட அரசியல் வானத்தின் கீழ் தி.மு.க-வின் மாற்றுக் கட்சியானதே தவிர, அவர்களால் அந்த வானத்தை அகற்ற முடியவில்லை. தி.மு.க தொடர்ந்து அரசியல் களத்தில் நின்றதுடன், தமிழ்நாட்டு அரசியலின் திசைகாட்டியாகவும் கலைஞர் தலைமையில் வீறு நடை போட்டது.

தொடர்ந்து எத்தனையோ சோதனைகள், பொய் பிரச்சாரங்கள். ஈழப் போராளிகள் நடமாட்டம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்று 1990ஆம் ஆண்டு தி.மு.க

(16ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ஹைய்த்தி: ஒரு முன்னாள் காவல்துறை...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

ஹைய்த்தியில் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கான அமைப்பின் தகவல்படி, செரிசியர் மற்றும் அவரது ஆயுதக் குழுக்கள் மக்களைக் கொல்வதில் மட்டும் கவனம் செலுத்தவில்லை, அவர்களின் குடியிருப்புகளை தீயிட்டு எரிப்பதிலும் கவனம் செலுத்தியது.

ஜூன் 2020 வரை நிலவிய அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்தி, ஒன்பது ஆயுதக் குழுக்களை ஒன்றிணைத்தார் செரிசியர். அதற்கு ஜி-9 அண்ட் ஃபேமிலி என்று பெயரிட்டார். இந்த அறிவிப்பை தனது யூடியூப் சேனல் மூலம் வெளியிட்டார்.

ஆனால் 2021இல் அதிபரின் படுகொலை அவரது அமைப்புக்கு ஒரு திருப்புமுனையாக இருந்தது. சர்வதேச ஆய்வாளர்களின் கூற்றுப்படி, அதுவரை அவருக்கு கிடைத்த அரசாங்க பாதுகாப்பை இழக்க வழிவகுத்தது.

இன்சைட் கிரைம் போர்ட்டல் தளத்தின் தகவலின்படி, மொய்ஸின் கொலைக்கு முன், ஜி-9 இன் நிதியில் 50 வீதம் அரசாங்கப் பணத்திலிருந்து வந்தது, 30 வீதம் கடத்தல்களிலிருந்து வந்தது, மீதமுள்ள 20 வீதம் மிரட்டி பணம் பறித்தல் மூலம் திரட்டப்பட்டது.

அதிபர் படுகொலைக்குப் பிறகு, அரசாங்க நிதியுதவி 30 வீதமாக குறைந்தது. இந்த வீழ்ச்சி தான் நாட்டின் அரசியல் கட்டுப்பாட்டை மரபுரிமையாகக் கொண்ட மக்களுக்கு எதிரான தனது போரைத் துவங்க செரிசியரைத் தூண்டியதாகக் கூறப்படுகிறது.

ஹைய்த்தி பிரதமர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்

மொய்ஸின் படுகொலைக்குப் பிறகு பிரதமராகப் பதவி ஏற்றார் ஹென்றி. 2021 அக்டோபரில், அவர் ஒரு நினைவுச் சின்னத்தில் அஞ்சலி செலுத்த சென்ற போது பலவந்தமாக தடுத்து நிறுத்தப்பட்டார். ஏனெனில் செரிசியரின் ஆயுதக்குழு உறுப்பினர்கள் அப்போது திடீரென்று தோன்றி பிரதமரை நோக்கி சுட்டனர்.

வெள்ளை நிற உடையை அணிந்துகொண்டு, சுற்றி ஆயுதமேந்திய நபர்கள் நிற்க, தலைவர் செரிசியர் அதே நினைவுச்சின்னத்தில் மலர் மாலையை வைத்து அஞ்சலி செலுத்தினார். இது நாட்டில் அவருக்கு இருந்த அசாதாரணமான சக்தியை வெளிப்படுத்தியது.

நாட்டின் எரிபொருள் விநியோகத்திற்கு எதிராக நாசவேலை நடவடிக்கைகளை முன்னெடுத்ததாக செரிசியர் மீது குற்றம் சாட்டப்பட்டது. ஹென்றியின் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கையாக செரிசியரின் ஆட்கள் பெட்ரோல் ஏற்றிச் செல்லும் பல வாகனங்களை தடுத்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட பெட்ரோல் தட்டுப்பாடு ஹைய்த்தியில் நிலைமையை மேலும் மோசமாக்கியது.

அவரது ஜி-9 குழு, எதிரி குழுவான ஜி-பெப் உடன் தொடர்ந்து போரிட்டு வருகிறது. படுகொலை செய்யப்பட்ட முன்னாள் அதிபர் மொய்ஸை சில கட்சிகள் தொடர்ந்து எதிர்த்து வந்தன. அந்த கட்சிகளுடன் ஜி-பெப் குழுவுக்கு தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இரு குழுக்களிடையே நடக்கும் துப்பாக்கிச் சூடு மற்றும் போர்கள் வழக்கமான ஒன்றாக மாறிவிட்டன. தொலைதூர கிராமங்களில் இருந்து தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸ் வரை இந்த சண்டைகள் பரவியுள்ளன.

இத்தகைய சண்டைகள் அவர்களின் வட்டத்தை விரிவுபடுத்துவது மட்டுமல்லாது, புதிய உறுப்பினர்களை ஈர்க்கவும் உதவுகிறது.

●

# தமிழ்நாட்டு அரசியல் வானம் தி.மு.க...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியைக் கலைத்தார்கள். அதன்பின் நடந்த தேர்தலில் ராஜீவ் காந்தி படுகொலை ஏற்படுத்திய அனுதாப அலையில் தி.மு.க அடைந்த தோல்வியை வைத்து அதை அரசியலிலிருந்து அப்புறப்படுத்தத் துடித்தார்கள்.

தி.மு.க ஒன்றிய அரசில் பங்கேற்ற ஐக்கிய முன்னணி அரசை ஜெயின் கமிஷன் அறிக்கையைக் காரணம் காட்டி, தி.மு.க மீது அபாண்டமான ஐயங்களைக் கூறி கலைத்தார்கள். தி.மு.க-வைத் தனிமைப்படுத்த துடித்தார்கள்.

எத்தனையோ முயற்சிகள் செய்தும் ஆரிய சக்திகளால், மதியூகிகளால், சூழ்ச்சி வலைப்பின்னல்களால் தி.மு.க என்ற அரசியல் வானத்தினை மறைத்திட முடியவில்லை. உதயசூரியனின் பயணத்தைத் தடுத்திட முடியவில்லை.

இப்போது ஆரிய மாயையின் புது முகமூடியாக வந்திருக்கும் நரேந்திர மோடியால் மட்டும் அந்த வானத்தை தகர்த்துவிட முடியுமா என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் அடுத்த தலைமுறையினை, இளைஞர் படையினை வரலாற்றுப் பயணத்தைத் தொடர்வதற்கு உருவாக்கி விட்டது.

அதனைக் கண்டு பொறுக்காமல்தான் வாரிசு அரசியல் என்று மாய்மாலம் செய்கிறார்கள். கொள்கைக்கும், பண்பாட்டுக்கும் வாரிசுகள் தோன்றத்தான் செய்வார்கள்.

மறைந்து ஐம்பதாண்டுக் காலம் கழித்து பெரியார் மீண்டும் புத்துயிர் பெறுகிறார். அவரைக் குறித்த நூல்கள் பெருகுகின்றன. கர்நாடக இசைக்கலைஞர் டி.எம். கிருஷ்ணா “சிந்திக்கச் சொன்னவர் பெரியார்” என்று பாடுகிறார்.

அண்ணா. பெரியார், கலைஞர் என்ற திராவிட இயக்கத்தின் பேராளுமைகள் இளைய தலைமுறையின் இதயங்களில், சிந்தனைகளில் நிறைகிறார்கள்.

எத்தனையோ தேர்தல்கள் வரலாம். வெற்றி தோல்விகள் வரலாம். கட்சிகள் பல உருவாகிக் கலையலாம். அவையெல்லாம் மேகங்கள் போல. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற வானம் மறையாது.

ஏனெனில் அதனை நிறைத்திருப்பது பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான ஒரு பண்பாட்டின் ஒளி. அதுவே திராவிட தமிழ்ப் பண்பாடு. அதனை அழிக்க ஆரியம் எவ்வளவு முயன்றாலும் அது நடக்காது.

●





